AR
811

# ஐந்திரம்

க. ப. அறவாணன்
M.A., B.O.L. M.Litt.

# ஐந்திரம்

க. ப. அறவாணன்
M.A. B.O.L., M.Litt.

விற்பனை உரிமை

பாரி நிலையம்
சென்னை-600001.

AINDHIRAM

© Kadalangudi Palaniyappan Aravaanan. (1941)

First Edition : Jan. 1974

Price: Rs : 2

P 15, C × A 1
N 75

Printed at
Novel Arts Printers, Madras-600014.

என்னை
ஊக்கப் படுத்தி
ஆய்வாளனாய்
அடைக்கலம் தந்த
சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ்த் துறைக்கு

## பொருளுரை


கற்கப் புகும் முன் 5

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் 9

ஐந்திரமும் தொல்காப்பியமும் 42

அயல்மொழிகளில் ஐந்திரத் தாக்கம் 59

ஐந்திரம் பற்றி ஒரு பார்வை 73


# புகும் முன்...

உலகில் மிகப் பழைய இலக்கணத்தைப் படைத்தது இந்தியரே. கிறித்துவிற்கு முன் இந்தியா முழுதும் வாழ்ந்திருந்தவர் திராவிடத் தமிழரே. ஆதலால் முதல் இலக்கணப் படைப்பாளி ஒரு தமிழனாகவே இருத்தல் கூடும். இன்று வரை கிடைத்திருக்கும் இலக்கணங்களுள் மிகப் பழமையானவை தொல்காப்பியமும், பாணினீயமும். இவை இரண்டும், இவற்றிற்கு முன் தோன்றிய ஐந்திர இலக்கணத்தின் தாக்கம் பெற்றவை. சிலர் பாணினீயத்திற்குப் பிற்பட்டது ஐந்திரம் என நிறுவ முயன்றனர் அது முற்றும் தவறு என்பது ஆராய்ச்சியால் தெரிய வருகிறது. தொல்காப்பியர் ஐந்திர இலக்கண அறிவு நிறைந்தவர் என்பதை 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற பாயிரத் தொடர் துலக்குகிறது. 'ஐந்திரம் ஆரிய நாட்டு நூல் அன்று; தமிழ் நாட்டில் வழங்கிய நூல்' என்றொரு குறிப்பு அறிஞர் தாரநாதர் என்பவரால் கூறப் பெறுகிறது (இந்நூல். பக்கம் 30). இஃது உண்மை எனில் ஐந்திர இலக்கணமும் தமிழரால் எழுதப் பெற்றது என்பது தெளிவாகிவிடும். இவற்றைப் பற்றி விரிவாக ஆராய்கிறது இந்நூல்.

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று குறிப்பது பற்றிப் பல விளக்

கங்கள் கூறப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக எடுத்துக்காட்டப் பெறும் எட்டு விளக்கங்களை எடுத்து ஆராய்ந்து, பாணினிக்கு முற்பட்டு நிலவிய இலக்கணக் கோட்பாடுகளுள் ஐந்திரக் கோட்பாடும் ஒன்று. இதனை அறிந்தவர் தொல்காப்பியர் என முடிவு காணுகிறது இந்நூல். இவையன்றி ஐந்திரத் தாக்கம் பெற்ற இந்தியத் துணைக் கண்ட நூல்கள் அனைத்தும் சுருங்கச் சுட்டப் பெறுகின்றன.

இந்நூலை எழுதப் பெருந் தூண்டுதலாக இருந்தது டாக்டர். ஏ. சி. பர்ணல் 1875 இல் எழுதிய **On the Aindhra School of Sanskrit grammarians - Their place in the sanskrit and Subordinate Literatures'** என்ற 120 பக்கங்களை உடைய நூலாகும். அவர் தமது நூலில், தமிழ் இலக்கணங்கள் அனைத்தும் சமற்கிருதத்தைத் தழுவியவை ; சமற்கிருதத்தினின்று கடன் வாங்கியவை என்று நிறுவ முயன்றிருக்கிறார். தமிழிலக்கணத்தின் (தொல் காப்பியம்)' தொடக்கமே கி. பி. எட்டாம் நூற்றாண்டு எனக் கருதுகிறார். **"The beginning of Tamil Grammar must be about the 8 th century. A. D. p 55 Food note"** அவர் கருத்துகள் எடுத்துக் காட்டப் பெற்று, அவை சரி யல்ல என நிறுவுகிறது இந்நூல்.

ஐந்திரம் பற்றித் தனியாகத் தமிழில் வரும் நூல்களுள் இந்நூலே முதல் நூல். ஐந்திரம் பற்றிப் பத்தாண்டுகளாக எண்ணம் இருந்து வந்தது. 1967 இல் ஐந்திரம் பற்றி ஒரு புதிய பார்வையை எழுதினேன். அக் கட்டுரை 'தென் மொழி'த் திங்கள் இதழில் வெளிவந்தது. இந்நூலிலும் அதனை இறுதியில் சேர்ந்துள்ளேன். பின்னர் அது பற்றிய செய்திகள் கிடைக்கிற பொழுதெல்லாம் எழுதிச் சேர்த்து வந்தேன். அண்மையில், சென்னைப் பல்கலைக்



கழகத் தமிழ்த் துறையில் பி.எச்.டி. ஆராய்ச்சி மாணவன் என்ற முறையில் ஐந்திரம் பற்றி ஒரு கட்டுரை படிக்க நேர்ந்தது. டாக்டர் பர்ணல் எழுதிய நூல்பற்றி மேற் கோள் குறிப்புகளால் அறிந்திருந்தேனே ஒழிய அதை அன்றுவரை கற்றதில்லை. எப்படியும் அந்நூலைப் படித்து விடுவது எனச் சென்னை நகர நூலகங்கள் அனைத்திலும் துழாவினேன். எங்கும் கிடைக்க வில்லை. பின்னர் ஓரிடத்தில் இருப்பதாகச் செய்தி கிடைத்தது. அவர்களைப் போய் அணுகிய பொழுது, நூலைக் கண்ணில் கூடக் காட்ட மறுத்து விட்டார்கள். பின்னர், முன்னாள் அனைத்து இந்திய ஓவர்சீசு வங்கியின் பொதுமேலாளரும், Voice of Valluvar, Voice of Vallalar, என்ற இரண்டு அரிய அழகிய ஆங்கில நூல்களின் ஆசிரியருமாகிய திருமிகு S. R. V. அரசு அவர்கள் பர்ணல் எழுதிய நூலைப் பெற்றுத் தந்தார்கள். என் கெழுதகை நண்பர் மறைமலையடிகள் நூலகர் திருமிகு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களும் நூல் தேடும் முயற்சியில் என்னுடன் அலைந்தார்கள் எப்படியோ நூலைப் பிடித்து, படித்து முடித்தேன். அதன் பின்பே என் கட்டுரையை, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைக் கருத்தரங்கில் அரங்கேற்றினேன். கட்டுரையாக அமைந்த அதனை விரித்தெழுதி நூலாக வெளியிட்டால் பயனாக இருக்குமே என்றெண்ணினேன். கட்டுரை அரங்கேற்றுதற்கும், அச்சேறுதற்கும் காரணமான டாக்டர். ந. சஞ்சீவி அவர்களை அணுகினேன். எனக்கு வழித்துணையாகவும் வழிகாட்டியாகவும் இருக்கிற அவர்கள் உடன் ஒப்புதல் தந்தார்கள். பிறகே இது இந்நூல் வடிவம் பெற்றது.

ஐந்திரம் பற்றிய முதல் தமிழ் நூல் என்பதுடன், இன்னொரு வகையிலும் இந்நூல் முதன்மை பெறுகிறது.

அது அச்சான எழுத்து முறை. இதுவரை தந்தை பெரியாரின் நூல்களும், சுதேசமித்திரன் பழைய இதழ் களும் மட்டுமே இவ்வாறு அச்சேறினவை. பிற யாரும் இவ்வாறு நூலை அச்சிட்டதாகத் தெரியவில்லை நான் துணிந்து, லை, ணை, று, னை முதலானவற்றை விலக்கி, லை, ணா, றா, னா, என அச்சிட்டிருக்கிறேன். தமிழை அறிவியல் மொழியாக்க விரும்புகிற யாரும் இம்முறையை வெறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஐந்திர ஆராய்ச்சி இதனுடன் முடிவது அன்று. மேலும் ஆராயின், மேற்கோளாகச் சில நூற்பாக்கள் கிடைத்தல் கூடும். அவை ஐந்திர ஆய்விற்குப் பெருந்துணையாகும். சான்றாகத் தொல்காப்பியம் பற்றி மேற்கோள் வழி அரிய செய்திகள் கிடைத்துள்ளன.

முடி பொருள் அல்லா தடியள விலவே (யா.வி.ப. 132)
வாகை பாடாண் பொதுவியல் திணை எனப்
போகிய மூன்றும் புறப்புறப் பொருளே. (யா.வி.ப. 571)

தொல்காப்பியப் பாட்டியல் ஒன்று நவநீதப் பாட்டியல். உரையில் மேற்கோளாகக் காட்டப் பெறுகிறது. யாப் பருங்கல விருத்தியின் இடம் பெற்றுள்ள வேறு சில நூற் பாக்கள், தொல்காப்பியத்தைச் சார்ந்தனவோ என்று ஐயுற வைக்கின்றன. களவியல், 27 ஆம் நூற்பா பின் இரு வரி களுக்கு இப்போது காட்டப்படும் பாடம் சரியன்று.

'புற நீர் மாக்கலன் அறிய வாயிடை' என்றிருக்க வேண்டியது, 'பிறநீர் மாக்கள் இன்றிய ஆயிடை, என நச்சினார்க் கினியர் காலத்திலேயே பிறழ்பட உணரப்பட்டு உரை இயற்றப் பெற்றுள்ளது. (இதனைக் கூறுபவர் புலவர். வி.மு. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்.) ஆக இவற்றை எல்லாம் நோக்க, தமிழ் நூல்களைப் பற்றிய மேலோட்டமான ஆய்வு போதாது என்பது தெளிவாகிறது. மூழ்க மூழ்கக் கருத்து முத்துகள் கிடைக்கும். நூலுடன் நாம் கலந்து ஆழ்ந்து பயிலப் பயில மேலும் பல அரிய செய்திகள் கிடைக்கும். ஐந்திரம் பற்றியும் அது போன்ற ஆய்வுகள் பல்குதல் வேண்டும். அதற்கு இந்நூல் தூண்டுதலாக அமையுமாக.

**க. ப. அறவாணன்**

# 1

# "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்"

மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.
(தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம், 13–15)

மேலே கண்ட வரிகள் பனம்பாரனார் இயற்றிய தொல் காப்பியப் பாயிரத்தின் இறுதிப் பகுதி ஆகும். இப் பகுதியில் வரும் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பது பற்றிய ஆய்வே இந்நூல்.

தொல்காப்பியருடைய வரலாற்றை வரையறுப்பதில் இத்தொடர் பெரும்பங்கு பெற்றி ருக்கிறது. ஐந்திர வியாகரணம் பாணினிக்குப் பின் தோன்றியது. அவ்வாறு தோன்றிய காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டே. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த ஐந்திரத்தைக் கற்றவர் தொல் காப்பியர் என்ற கருத்தினது பாயிரம். எனவே தொல் காப்பியர் காலமும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின்பே என்று சிலர் கொள்வர்.[1] ஐந்திரம், சைனம் சார்ந்த இந்திரனால் இயற்றப்பட்ட நூல். அந்நூலை அறிந்தவர்

1. **Burnell. A.C.Dr. On the Aindra School of Sanskrit. P.**55 **Grammanians,** 1875

எனப் பாயிரம் குறிப்பதால், தொல்காப்பியரின் சமயம் சைனம் என்று சிலர் கருதுவர்.[2] ஐந்திரம், சமசுக்கிருத வியாகரணங்களுள் ஒன்று. எனவே தொல்காப்பியர் சமசுக்கிருத வியாகரணத்தை அறிந்திருந்தார்; அதன் செல்வாக்கிற்கும் உட்பட்டிருந்தார் எனச் சில அறிஞர் எண்ணுவர். ஆக, தொல்காப்பியரின் காலத்தையும், சமயத்தையும், பிற மொழி அறிவையும், சமசுக்கிருதச் செல்வாக்கையும் தெளிவிக்கிற சான்றாக இத்தொடர் விளங்குகிறது. ஆகவே தொல்காப்பிய ஆய்வில் இத்தொடர் பற்றிய ஆய்வும் தலைமை வாய்ந்தது.

தொல்காப்பியப் பாயிரத்தில் இடம் பெற்றுள்ள ஐந்திரத்தைப் பற்றி, அண்மைக் காலம் வரை பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு:

1. பாயிரமோ, சிறப்புப் பாயிரமோ பாடும் பழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இல்லை. சங்கப் பாக்களை நூல்களாகத் தொகுத்த தொகுப்புக் காலத்தில் அவற்றுள் பெரும்பாலானவற்றிற்குப் பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பாடிச் சேர்த்துள்ளதைப் போன்று, பிற்காலத்துப் புலவர் ஒருவர் தொல்காப்பியரைப் பற்றிய மரபு வழிச் செய்திகளைத் திரட்டி, அவற்றை நூலின் அமைப்பு முறையோடு சேர்த்துக் கூறுகின்ற பொழுது, நூலினுள் காணப்படும் இலக்கண மரபு பாணினிக்குக் காலத்தால் முற்பட்ட ஐந்திரத்தைத் தழுவியது என்னும் கருத்தைத் தெளிவுறுத்தவே 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று அடை கொடுத்துப் பாடி

2. நல்லறம் (திங்கள் இதழ்) மே. 1974. ப. 1.

3. **Subramania Sastri. P. S. Dr. History of Grammatical Theories in Tamil and their relation to the Grammatical Literature in Sanskrit, 1934. p. 4.**



இருக்கலாம். சிலப்பதிகாரக் காலத்திலும், தேவாரக் காலத்திலும் இந்திரன் இயற்றிய இலக்கணம் சிறப்பு மிக்கதாகப் போற்றப்பட்டது. எனவே சங்க நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்தில் (கி. பி. 3ஆம் நூற்றாண்டு 6ஆம் நூற்றுண்டு) தொல்காப்பியத்திற்கு யாரோ ஒரு புலவர் இச்சிறப்புப் பாயிரத்தை இயற்றி இருக்கலாம். பழைய மரபு வழிச் செய்திகளை அப்புலவர் அறிந்திருந்தமையால், 'பனம்பாரனார்' அப்பாயிரத்தை இயற்றியதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கலாம்.[4]

2. தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து பிரிவுகளை உடையது. இதனை ஐந்திலக்கணம் என்பர். ஐந்திலக்கணமே ஐந்திரம் எனக் குறிக்கப்பட்டுக் காலப்போக்கில் ஐந்திரம் என மருவி வழங்கியது.[5]

3. சைனத் துறவிகள் பஞ்சாஸ்தி காயம் முதலான தத்துவத்தை அறிந்திருத்தல் வேண்டும். தொல்காப்பியர் சைனத்துறவி. எனவே பஞ்சாஸ்தி காயம் என்பன முதலான தத்துவங்களை அறிந்தவர் என்ற கருத்தினை அறிவிக்கிறது இத்தொடர்.[6]

4. சைன சமயத் துறவிகள் பின்பற்ற வேண்டிய மகா விரத'ங்கள் ஐந்து. அவை: ஊறன்மை, வாய்மை, களவு செய்யாமை, மணவாமை, தவம் என்பன. இவ்

4. திருநாவுக்கரசு, க.த. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது கருத்தரங்க மலர், 1972. ப. 430—435.

5. நாயுடு. அ.கி. பண்டித. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம். ப. 11.

6. அனந்தநாத நயினார். தி. திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சிந்தாந்த விளக்கமும். 1932. ப. 96.

வுறுதிப் பாடுகளையே ஐந்திரம் என்ற சொல் குறித் திருத்தல் வேண்டும்.[7]

5. சான்றோர்களுக்குரிய அன்புடைமை, பழிநாண் உடைமை, ஒப்புரவுடைமை, கண்ணோட்டம், மெய்யுரை என்ற ஐந்து பண்புகளாலும் நிறைந்தவர் என்ற கருத் தினது பாயிரம்.[8]

6. சைன சமய பூசை முறைகளுள் ஒன்று 'ஐந்திரத் துவஜ பூஜை' என்பதாகும். அது அறிஞர்க்கும் அரியது; பெரியது. அதனைக் கற்றவர் தொல்காப்பியர் என்ற கருத்தினது பாயிரத் தொடர்.[9]

7. பாணினிக்குப் பிற்பட்ட சமசுக்கிருத இலக்கணக் கோட்பாடுகளுள் ஒன்றான ஐந்திரக் கோட்பாட்டை நன்கு அறிந்தவர் என்ற பொருளது தொல்காப்பியப் பாயிரம்.[10]

8. பாணினிக்கு முற்பட்டு நிலவிய இலக்கணக் கோட் பாடுகளுள் ஐந்திரக் கோட்பாடும் ஒன்று. இதனை அறிந்தவர் என்ற நோக்கினது பாயிரம்.[11]

இவ்வெட்டும் ஆராயத் தக்கவை. முதற் கருத்து தொல்காப்பியர் வரலாறு பற்றிய முதன்மைச் சான்றாக விளங்கும் பாயிரத்தையே ஐயுறுவது. பிற்காலப் புலவர் ஒருவரின் பிற்காலச் சேர்க்கை என்பது கட்டுரையாளர் கருத்து. இது உண்மை என்று கொண்டால் தொல்காப்பிய நூலாசிரியர் தொல்காப்பியர் என்பதற்குக் கூடச் சான்

7. அறவாணன். க. ப. புரட்சிப் பொறிகள். 1972. ப. 27.
8. மே.கா.நூ. ப. 27.
9. ஐந்திரத்வஜப் பூசை தொடர்பான செய்தியை எனக்குத் தந்த வர்கள் : திரு. சக்கரவர்த்தி, திரு. ச. தேவகுமார், சென்னை-1.
10. வையாபுரிப்பிள்ளை. எஸ். தமிழ்ச் சுடர் மணிகள். ப. 54.
11. வெள்ளைவாரணனார். க. தொல்காப்பியம். 1970. ப. 83.



றில்லை. இப்பாயிரத்தால் தொல்காப்பியரைப் பற்றிய பன்னிரு செய்திகளை அறிந்து கொள்கிறோம்.[12]

(1) தொல்காப்பியர் தமிழகத்தின் வழக்கு, செய்யுள் இரண்டையும் முதலாகக் கொண்டு நூல் ஆராய்ந்தார்.

(2) எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றையும் ஆராய்ந்தார்.

(3) செந்தமிழ் நிலத்து முந்தையோர் நூல்களை ஆராய்ந்து தம் நூல் செய்தார்.

(4) முறைப்பட எண்ணிச் செய்தார்.

(5) முன்னமே இருந்த புலமைக் கருத்துகளைத் தொகுத்தார்.

(6) குற்றமற்ற பநுவலாகச் செய்தார்.

(7) பாண்டியன் அவையில் அரங்கேற்றினார்.

(8) அதங்கோட்டு ஆசானுக்குக் குற்றமற (உளங் கொள) உரைத்தார்.

(9) மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டினார்.

(10) தொல்காப்பிய ஆசிரியர் பெயர் தொல்காப்பியன்.

(11) ஐந்திர இலக்கணம் வல்ல அறிஞர் அவர்.

(12) தொல்காப்பியம் செய்தமையால் தன் புகழ், தமிழ்ப் புகழ் முதலாகப் பல்புகழ் நாட்டிய தொல்காப்பியர் தவநெறி யாளர். தொல்காப்பியப் பாயிரத்தை ஐந்திரம் என்ற ஒன்றை மட்டும் கொண்டு பிற்சேர்க்கை எனக் கொள்வோ மானால் மேலே உள்ள தொல்காப்பியர் வரலாறு பற்றிய

12. சஞ்சீவி. ந. டாக்டர். பனம்பாரனார் பாயிரம். இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்க நிகழ்ச்சிகள். 1968. ப. 179.

சில செய்திகளும் இல்லாது ஒழியும். பாயிரத்தின் பழமையை ஐயுறுவார் காட்டும் கருதுவதற்குரிய சான்று ஒன்றே ஒன்றுதான்; பாயிரம் பற்றித் தொல்காப்பியத்துள் அகச்சான்று எதுவும் இல்லை என்பது அது. பாயிரம் பற்றித் தன் இலக்கண நூலில் பேசுதலை வேண்டா எனத் தொல்காப்பியர் தவிர்த்திருக்கலாம். பாயிரம் இல்லாத நூலுக்குப் பாயிரத்தைப் பாடிச் சேர்த்தல் பிற்காலப் புலவர் நோக்கு என்றால், அதுபோலப் பாயிரம் இல்லாப் பிற நூல்களுக்கும் செய்திருக்கலாமே. தொல்காப்பியத்திற்கு அடுத்த பழைமை உடைய இறையனார் களவியல், பாயிரம் இல்லாமல்தான் உள்ளது. யாரும் பாயிரம் பாடிச் சேர்க்க வில்லையே! அன்றியும் தொல்காப்பியரின் ஒருசாலை நண்பர் பனம்பாரனார் என நூல்களும் உரைகளும் குறிப்பிடுகின்றன.[13] மயிலைநாதரும், குணசாகரரும் 'பனம்பாரம்' என்ற இலக்கண நூல் ஒன்றையே தனித்துச் சுட்டுகின்றனர்.[14] சில நூற்பாக்களையே பனம்பாரனார் எழுதியவை என்று எடுத்துரைக்கின்றனர். குறுந்தொகை 52ஆம் பாடலை இயற்றிய பாவலர், பனம்பாரனார் என்று குறிக்கப் படுகிறார். இவை எல்லாம் பனம்பாரனாரின் வாழ்வு உண்மையையும், பழைமையையும் சாற்றும் சான்றுகள். ஆதலால், பனம்பாரனார் தொல்காப்பியர் காலத்திலேயே உடன் வாழ்ந்தவர் என்று கொள்ளுதலே பொருத்தமான தாகும். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனா வரையர் முதலான தலைமை வாய்ந்த தொல்காப்பிய உரை காரர்கள் பனம்பாரனாரின் பாயிரப் பழைமையை மறுக்

13. புறப்பொருள் வெண்பாமாலை, நம்பி அகப்பொருள் பாயிரங்கள், தொல்காப்பியம்—இளம்பூரணர், நச்சினார்க்கினியர் பாயிர உரைகள்.

14. மயிலைநாதர் உரை. 51, 52 யாப்பருங்கல விருத்தி 29. உரை.



காமல் போற்றுவதும்,[15] உரை காண்பதும், தொல்காப்பியச் சுவடி எதுவும் பாயிரம் இன்றிக் கிடைக்காமையும், பனம் பாரனார் பாயிரத்தின் பழமையை வற்புறுத்துவனவாகும்.

ஐந்திரம் என்பது ஐந்திலக்கணங்களைக் குறிப்பிடு கிறது என்பர். இது வரலாற்று வழு உடையதாகும். எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றுமே பழமை வாய்ந்த இலக்கணப் பிரிவுகள். பொருள் அதிகாரத்தின் விரிவுகளே காலப்போக்கில் மேலும் பல பிரிவுகளைச் சேர்த்தன. இறையனர் களவியல் உரையின் காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு என்ற நான்கு பிரிவு களே இருந்தன. (முதற் சூத்திர உரை. ப. 6) இலக்கணம், 'பஞ்ச லட்சணம்'-ஐந்திலக்கணம்' என்று விரிவடைந்தது பிற்காலச் சோழர் காலத்திலேயே. கி. பி. 10ஆம் நூற்றாண்டு அளவிலே தான் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து பிரிவுகள் தெளிவாகத் தோற்றம் எடுத்தன. அன்றியும் இக்காலத்திலோ, இக் காலத்திற்கு முன்னரோ, பின்னரோ கூட ஐந்திலக்கணப் பாகுபாட்டை, ஐந்திறம் என்றோ, ஐந்திரம் என்றோ சுட்டும் மரபு இலக்கியங்களிலோ, இலக்கணங்களிலோ காணப்படவில்லை. ஐந்திறம், ஐந்திரம் ஆயிற்று என்று காட்டுவோர் அது மொழி மரபு என்று நிலைநாட்டத் துணைச் சான்று எதுவும் காட்டவில்லை. திரம்—திறம் என்ற இடையின, வல்லின மாற்றம் தமிழ்மொழி வர லாற்றிற்குப் பொருந்துவதாக இல்லை. எனவே ஐந்திலக் கணமே ஐந்திரம் என்ற விளக்கத்தை விலக்குதலே ஆய்வு நெறி.

ஐந்திரம் என்பதற்கு ஐந்திறம் என்றே பாடங் கொண்டு, ஐந்திறம் என்பது சைன சமயத் துறவிக்குரியன வாக வற்புறுத்தப்படும் பஞ்சாஸ்தி காயத்தைக் குறித்தது

15. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் பாயிர உரை; சேனாவரையர். 74ஆம் நூற்பாவுரை.

என்று விளக்குவர். தவயோகத்தை உடையவர் தத்துவங்கள் நிறையப் பெற்றிருக்க வேண்டும். ஆதலால் ஐந்திர வியாகரணம் நிறைந்தவர் எனச் சொல்லுதல் பொருந்தாது. இங்கு ஐந்திறம் என்பது பஞ்சாஸ்தி காயம் என்பதைக் குறித்தது. ஜீவாஸ்தி காயம், புத்கலாஸ்தி காயம், தர்மாஸ்தி காயம், அதரிமாஸ்தி காயம், ஆகாசாஸ்தி காயம் என்பன பஞ்சாஸ்தி காயம் என்று குறிக்கப்படும். பஞ்ச- ஐந்து ; அஸ்திகாயம்–ஸ்திரம்–திரம். பஞ்சாஸ்தி காயத்தை 'ஐந்திரம்' என்று சுட்டும் சான்று கிடைக்கிற வரை இக் கருத்தை ஏற்பதற்கில்லை. இத்தகு சான்று தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் இல்லை. சைன சமயம் சார்ந்த பிற மொழி நூல்களிலும் இருப்பதாகத் தெரியவில்லை.

சைனத் துறவிகளுக்குரிய தலையாய நோன்புகள் ஐந்து.

பெரிய கொலை பொய் களவொடு காமம்
பொருளை வரைதலோடு ஐந்து

என வரும் அருங்கலச் செப்பு (66). இப்பாடலைத் தொடர்ந்து ஐந்து நோன்புகளையும் விரிவாக, பன்னிரண்டு பாக்களில் விளக்குகிறது அந்நூல். 'ஐந்திரம் நிறைந்த' என்ற தொடரும், 'நிறைந்த' என்ற எச்சமும் ஐந்து குணம் நிறைந்த என்பதற்கு இசைவாக இருக்கின்றன. இவற்றைத் துறவிகளுக்குரிய சால்புகளாக சைனம் வரையறுப்பதும், தொல்காப்பியப் பாயிரம் அவரைத் துறவி (படிமையோர்) என்று குறிப்பதும் பொருந்தி இருக்கின்றன. எனினும், தொல்காப்பிபர் சமணத் துறவி என்று ஐயம் திரிபற வரையறுக்கிற வரை இக்கருத்தை ஏற்பதற்கில்லை. அன்றியும் அணு விரதம் ஐந்தையும், 'ஐந்திரம்' என்று யாரும் குறித்திருப்பதாகவும் தெரியவில்லை.



அன்புடைமை, பழிநாணுடைமை, ஒப்புரவுடைமை, கண்ணோட்டம், மெய்யுரை என்ற ஐந்தும் நிறைந்த சான்றோர் என்ற கருத்து, திருக்குறள் (983) மணக்குடவர் உரையைச் சான்றாகக் கொண்டு எழுந்தது. இக்கருத்திற்கும், முன் கண்ட கருத்திற்கும் அரணாக இருப்பது 'நிறைந்த' என்ற பெயரெச்ச மாகும். பிற அறிஞர்களின் கருத்துப்படி ஐந்திரம் நூலாகவோ, நூற்பாகுபாடுகளாகவோ இருக்குமானால், நிறைந்த என்ற பெயரெச்சம் பொருந்தி வருகிறதா ? படி, கல், ஓது, அறி, தொடு, உணர் போன்ற வினைகளின் அடியாக வந்த எச்சத்தை அல்லவா பயன்படுத்தி இருத்தல் வேண்டும் ?

நிறை என்ற சொல், அழிவின்மை, ஆடவர் குணம் நான்கில் காப்பன காத்துக் கடிவன கடியும் திண்மை, இடை, உறுதிப்பாடு, கற்பு, துலாம், நேர்மை, நிறுத்தல் அளவு, நிறை என் ஏவல், நிறைவு, நீர்க்கால், நூறு பலம், மாட்சிமை, வரையறை என்ற பொருள்களை உணர்த்தும். கற்றல் என்ற பொருள் நிறை என்ற சொல்லிற்கு இல்லாமை எண்ணத் தக்கது. அன்றியும் தொல்காப்பியத்தில் நிறை என்ற சொல், கற்றல் என்ற பொருளில் எங்கும் பயன் படுத்தப்பட வில்லை என்பதும் கருதத் தக்கது.

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற தொடரின் பொருளாவது: ஐந்து உறுதிப்பாடுகள் - ஐந்து பண்புகள் நிறையப் பெற்ற தொல்காப்பியன் என்ப தாதல் வேண்டும். நிறைவு என்பது பண்பு நிறைவைச் சுட்டி வருதலைப் பல இடங்களில் பார்க்கிறோம்.

மாண்ட
பெண்மை நிறைந்த பொலிவு. (புறநானூறு 337.)
நன்மை நிறைந்த நயவரு பாண. (புறநானூறு 308.)

இலக்கணிகள் சிறந்த பண்புடையராய் இருத்தல் வேண்டும் எனப் பாயிரம் பகர்வோர் விரும்பி இருக்கின்றனர் என்பது பின் வருவனவற்றால் விளக்கமாகும்.

'பண்புற மொழிந்தனன் பான்மையின் தெரிந்தே' என வரும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரமும்,

'வலம்புரி முத்தின் குலம்புரி பிறப்பும்' எனத் தொடங்கி நல்லாசிரியர் இலக்கணம் கூறும் ஆத்திரையன் பேராசிரியப் பாயிரமும்,

'உலகியல் அறிவொடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரை ஆசிரி யன்னே'

என வரும் நன்னூற் பாயிரமும், குணக்கடற் பெயரோன்-குணசாகரர் என்ற யாப்பருங்கல உரை ஆசிரியரின்பெயரும் இலக்கண ஆசிரியனுக்கும், பண்பு நிறைவிற்கும் உள்ள தொடர்பை வற்புறுத்தும்.

இலக்கிய, இலக்கண வளம் மிக்க தமிழிற்கு ஒரு பேரிலக்கணம் எழுதிய தொல்காப்பியர், ஒரு சான்றோர் ஆதலின், சான்றோர்க்குரிய, அன்பு நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து பண்புகளும் நிறையப் பெற்றிருந்தார் என்று கூறுவது பொருந்துவதே. எனினும் ஐந்து பண்புகளை 'ஐந்திரம்' என்று எவ்வாறு குறித்தல் இயலும்? திரம் - உறுதிப்பாடுகள் – குணங்கள் என்று கொள்ளலாம். கொண்டால் திரம் என்பது ஸ்திரம் என்ற வடசொல்லின் தலைக்குறை எனல் வேண்டும். ஒரு பண்படிச் சொல்லும் (ஐ), ஸ்திரம் என்ற வடமொழிச் சொல்லும் சேர்ந்து ஒரு பண்புத் தொகைச் (ஐந்திரம்) சொல் உருவாகுமோ? ஒருவந்தம், தசநான்கு போன்ற இரு மொழிக்கூட்டு வடிவங்கள் தமிழில் வழங்கினாலும் 'ஐந்திரம்' போன்ற சொற்களைக் காட்ட இயலுமா ? ஐந்து



பண்புகளை ஐந்திரம் என்று சுட்டுவதற்குத் தொல்காப்பியர் காலத்தோ, அவருக்குப் பிற்காலத்தோ சான்று உண்டா? இவ்வினாக்களுக்கு விடை கிடைக்கிற வரை 'ஐந்து பண்பு' என்ற விளக்கத்தை ஏற்பதற் கில்லை.

ஐந்திரம் என்பது ஐந்திரத் துவஜ பூசையைக் குறிக்கிறது என்று கருத இடம் இருக்கிறது. சைன மதத்தில் அருகனை வழிபடப் பல பூசை முறைகள் உள்ளன. அவற்றுள் தலையாயது ஐந்திரத்துவஜ பூசை'என்பதாகும். இப் பூசையை இந்திரனால் மாட்டுமே செய்ய இயலும். அனைத்து உலகங்களிலும் உள்ள வீடு பெற்ற இடங்களையும், நன்னிலை எய்திய இடங்களையும், அருகன் கோயில்களையும் உள்ளத்துள் கொண்டு இந்திரனால் செய்யப்படுவது இப்பூசை முறை ஆகும். இப்பூசையைப் பிறர் யாரும் செய்ய முடியாது. செய்தல் மட்டுமன்றி இப் பூசையை எல்லாராலும் அறிந்திடவும் இயலாது. மிகச் சிலரே அறிந்து, புரிந்து கொள்ள முடியும். அத்தகு மிகச் சிலருள் தொல்காப்பியரும் ஒருவர். இக்கருத்தை உணர்த்தவே 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற பாயிரத் தொடர் அமைக்கப்பட்டது.

சைன மத விளக்கப்படி இருநூறு பெரிய கண்டங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஆறு கண்டங்களைப் பெற்றிருக்கின்றன. அக்கண்டங்களின் பரப்பு அளவிடற்கரியது. ஆக $200 \times 6 = 1200$ கண்டங்கள். அவை ஒவ்வொன்றிலும் பல மாநகரங்கள் உள்ளன. ஒவ்வொரு நகரிலும் ஏறத்தாழ 360 கோயில்கள் உள்ளன. இவை போலவே எண்ணுதற்கரிய மலைகளும் குன்றுகளும் அக்கண்டங்களில் உள்ளன. அம்மலைகளில் முற்றும் துறந்த துறவிகளும், வீடு பேறு அடைந்தவர்களும், தீர்த்தங்கரர்களும் இருப்பர். பல தீவுகளும் உள்ளன. அவை ஒவ்வொன்றின் விட்டம்

45 இலக்கம் யோசனை தொலைவுடையது ஆகும். (1 யோசனை = 4000 கல்). அத்தீவுகளில் இலக்கக் கணக்கான சைனப் படிவங்கள் உள்ளன. அப்படிவம் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு முறையில் வழிபாடு செய்தல் வேண்டும். தனித்தனி மந்திரம் ; பூசை முறை. இவ்வாறு வழிபாடு செய்ய வேண்டிய இடங்கள் ஏறத்தாழ ஒருகோடி உள்ளன. அவை இருக்கும் திசை, இடம் அறிந்து அவ்வவற்றிற் குரிய பூசைப் பொருள்களையும் முறைகளையும் மந்திரங்களையும் அறிந்து வழிபாடு ஆற்றுதல் வேண்டும். இவ்வாறு அனைத்தையும் அறிந்து மரபு பிறழாமல் வழிபாடு ஆற்றும் ஆற்றல் பெற்றவன் இந்திரன் ஒருவனே ! இந்திரன் செய்யும் பூசை என்பதால் ஐந்திரப் பூசை என்றாயிற்று. இந்திரனால் பூசை செய்யப் பெறும் கடலால் சூழப்பட்ட பல வேறு தீவுகளையே, 'மல்கு நீர் வரைப்பு' எனப்பாயிரம் குறித்தது என்பர். இது கூர்ந்த ஆய்விற் குரியது. ஐந்திரப் பூசை தொடர்பாக மூன்று கட்டங்கள் கருத்திற்குரியவை. அவையாவன.

(அ) ஐந்திரப் பூசையை அறிதல் (To know)

(ஆ) ஐந்திரப் பூசையைப் புரிந்து கொள்ளுதல் (To understand)

(இ) ஐந்திரப் பூசையைச் செய்தல் (To do)

இம்மூன்றனுள், மூன்றையும் அறிந்தவன் இந்திரன். இந்திரனைத் தவிர பிற யாரும், பூசை செய்தல் முடியாது. ஆதலின், தொல்காப்பியரால் ஐந்திரப் பூசை செய்ய இயலாது. அடுத்தது ஐந்திரப் பூசையை மனப்பாடமாக அறிந்து வைத்திருத்தல். இது யாரும் செய்யக் கூடியது. எந்தப் புரோகிதராலும் (உவாத்தியார்) இயலுவது. அதனை அறிந்திருந்தார் தொல்காப்பியர் என்பதால்



பெரும் பெருமை ஒன்றும் இல்லை. ஒரு பெருமையும் இல்லாத ஒன்றைப் பனம்பாரனார் குறித்திருக்க மாட்டார். அடுத்தது, அறிந்தும், புரிந்தும் வைத்திருத்தல் (To know and understand). சிலராலே இயலக் கூடிய அளவிற்குக் கடுமையானது ஐந்திரப் பூசை. அத்தகு கடினமான கலையைத் தொல்காப்பியர் கற்றிருந்தார் எனல் ஓரளவு பொருந்துவதே. எனினும், தொல்காப்பியர்க்கு அது எவ்வகையில் பெருமை சேர்க்க வல்லது என்பது ஆய்விற் குரியது. பாயிர ஆசிரியரின் நோக்கம், தொல்காப்பியரைப் 'பத்திமான்' என்று காட்டுவதா ? பிறமொழி இலக்கண அறிவாளர் என்று காட்டுவதா ? தொல்காப்பிய நூல், இலக்கண நூல். இலக்கண நூல் எழுதும் ஆசிரியர், பிறமொழி இலக்கணங்களையும் நன்கு கற்றிருந்தார் என்று காட்டுதலே அவருக்குப் பெருமை சேர்க்கும். மிகச் சிறந்த 'பத்திமான்' என்று காட்டுவது பிழையாகாது ; ஆனால் பெரும் பெருமை ஆகாது. ஆதலால், இவ்விடத்தில் 'ஐந்திரப் பூசை' என்று பொருள் விளக்குவதில் சிறப்பொன்றும் இல்லை.

ஐந்திரம் என்பதை ஓர் இலக்கண முறை என்று ஒப்புக் கொள்ளுவோருள் சிலர் அது தோன்றிய காலம் பிற்காலம் என்று கொள்கின்றனர். சமசுக்கிருத இலக்கணங்களை ஆராய்ச்சி செய்த கீல்கார்ன் (Kielhorn) பெல்வெல்கர் (Belwalkar) என்ற பேராசிரியர்கள் ஐந்திர மதத்தில் கூறப்பட்டுள்ள பொருள்கள் பாணினீயத்திற்கு முற்பட்டன. ஆயினும், ஐந்திர மதமும் அதன் பெயரும் ஏற்பட்டமை அதற்குப் பிற்பட்ட காலத்தே தான் என்று எண்ணுகின்றனர்.[16] ஆதலால் ஐந்திரம் என்னும் பெயர் வழக்கும், மதமும் பாணினீயத்திற்குப் பிற்பட்டனவே.

16. **Systems of Sanskrit Grammar. p. 11.**

தொல்காப்பியர் தாம் சைனர் என்பதனாலும், பாணினீய முறை, பிறமொழியின் இலக்கணத்தை அமைக்கச் சிறிதும் பயன்படாது என்பதனாலும் ஐந்திர முறையைப் பின்பற்றினார் என்பர். பாணினீயத்திற்குப் பிற்பட்ட ஐந்திரத்தைப் பின்பற்றினதாலும், பிற சிலவற்றாலும் தொல்காப்பியர் காலம் கி. பி. 300க்குப் பிற்பட்டது என்பர்.[17] ஆங்கிலேய அறிஞர் ஒருவர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என்று எழுதுவர்.[18]

அண்மைக்கால ஆய்வில், 'ஜைன சாகித்ய அவுர் இதிகாசம்' என்ற இந்தி நூலில், திரு. நாத்துராம் பிரேமி என்பவர், ஐந்திரம் பற்றிய புதிய செய்தி ஒன்றை அறிவித்திருக்கிறார்.[19] கி. பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தேவநந்தி கன்னட நாட்டுக்காரர்; சைனர். இவரைப் பற்றிச் சிரவண வெள்குளம் கல்வெட்டுப் பாராட்டிப் பேசுகிறது (40-64) தேவநந்தி பேரறிஞராகத் திகழ்ந்ததால், 'ஜினேந்திர புத்தி' என்று பெயர் பெற்றார். தேவர்கள் இவருடைய திருவடிகளை அருச்சித்தனர். அதனால், அவருக்குப் 'பூஜ்ய பாதர்' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

தேவநந்தி எழுதிய நூலின் பெயர் 'ஜைனேந்திர சூத்திரப் பாடம்' என்பதாகும். இந்நூல் 3000 சூத்திரங்களைக் கொண்டது. இந்நூலிற்கு வழங்கிய பிறிதொரு

17. வையாபுரிப் பிள்ளை. தமிழ்ச் சுடர் மணிகள். ப. 54 **On the Aindra Grammar of Snt.**
18. **Grammarians. Their place in the Sanskrit And Subordinate Literatures., Mangalore. Basel Mission Book and Tract Deporsitory, London. 1875. p. 55. Foot Note.**
19. நாத்துராம் பிரேமி. ஜைன சாகித்திய அவுர் இதிகாசம் இந்தி நூல். இதன் சில பகுதி தமிழில் சௌரி என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு மஞ்சரி (சூலை. 1972) இதழில் வெளி வந்தது. பின்னர் நல்லறம் (மே. 1974) இதழிலும் வெளிவந்தது



பெயர் 'ஐந்திரம்' என்பதாம். இவ்வைந்திரத்திற்குப் பலர் உரை எழுதினர். இவரே ஓர் உரை எழுதினதாக, கன்னட நாட்டுச் சிமோகா மாவட்டக் கல்வெட்டு (எண்.46) ஒன்றால் தெரிய வருகிறது. இக்கல்வெட்டால், தம் இலக்கண நூல் ஐந்திரத்திற்கு, 'ஜைனேந்திர ந்யாசம்' என்னும் உரையும். 'பாணினியின் அஷ்டாத்யாயீ' என்ற இலக்கண நூலிற்குச் 'சப்தாவதாரம்' என்னும் உரையும், வைத்திய சாஸ்திர நூல்களும், 'தத்வார்த்த தீபிகா' என்ற சைன சித்தாந்த நூலும் இவரால் இயற்றப்பட்டன எனத் தெரிகிறது.

பூஜ்ய பாதரின் ஐந்திர இலக்கண நூலிற்கு வேறு நான்கு உரைகள் கிடைத்து உள்ளன. அவையாவன: அபயநந்தி எழுதிய 'மகா விருத்தி', பிரபா சந்திரன் எழுதிய 'சப்தாம்போஜ பாஸ்கர நியாசம்', சுருத கீர்த்தி எழுதிய 'பஞ்சவஸ்து ப்ரக்ரியா, மகா சந்திரன் எழுதிய 'இலகு ஜைனேந்திரம்'.

**ஜைனேந்திரத்தின் வீழ்ச்சி:** பூஜ்ய பாதருக்குப் பின் ஒரு நூற்றாண்டு கழிந்து, சாகடாயனர் என்பவர் கன்னட நாட்டில் தோன்றினார். இவரது மறு பெயர் : பால்ய கீர்த்தி என்பதாகும். இவர் சிறந்த இலக்கண அறிஞராக விளங்கினார். 'சப்தாநுசாசனம்' என்ற இலக்கண நூல் ஒன்று எழுதினார். அந்நூலிற்குத் தாமே 'அமோக விருத்தி' என்ற பெயரில் ஓர் உரையும் எழுதினார். இவரன்றி வேறு பல அறிஞரும், சப்தாது சாசனம் என்ற இந்நூலிற்கு வேறு பல உரைகள் எழுதினர். இந்நூலும், உரைகளும் தோன்றிய பிறகு, பூஜ்யபாதரின் ஜைனேந்திரத்தின் செல்வாக்கு மறையலாயிற்று. காலத்துக்கு ஏற்ற முறையில் ஜைனேந்திரம் அமையவில்லை என்றும் கருதப் பெற்றது.

பூஜ்ய பாதர், கன்னட நாட்டுப் பிராமணர்; கோலே என்பது இவர் பிறந்த ஊர். மாதவபட்டர் என்பார் இவர் தந்தை; சீதேவி என்பார் இவர் அன்னை. மாதவ பட்டர், தம் மனைவியின் விருப்பத்திற்கிணங்க சைனர் ஆனவர். இவருடைய மைத்துனரின் பெயர் பாணினி; வைணவ சமயத்தில் தீக்கை பெற்றவர் பாணினி. பூஜ்ய பாதரின் காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கம் ஆகும். இக்காலத்தில் வாழ்ந்த இலக்கண ஆசிரியர் சித்தசேனர் என்பாரை இவர் தமது நூலில் குறிப்பிடுகிறார். சித்தசேனர், சந்திர குப்த விக்கிரமாதித்தன் காலத்தவராவார். இவனது காலம் கி. பி. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டு என்பதால் பூஜ்ய பாதரின் காலமும் இக்காலமே என்று ஆகிறது.

**பூஜ்யபாதரின் மாணாக்கர் வச்சிர நந்தி :** பூஜ்ய பாதர், தமது நூலில், பூதபலி, சமந்த பத்திரர், ஸ்ரீதத்தர், யசே பத்ரர், பிரபா சந்திரர் முதலான இலக்கண ஆசிரியர் களையும் சுட்டிக் காட்டுகிறார். இவருடைய மாணாக்கரே, பாகூடவேதி வச்சிர நந்தி என்பவர். இவரே தமிழ் நாட்டு மதுரையில் கி. பி. 470 இல் திரமிள தமிழ்ச் சங்கத்தை நிறுவினவர். இச்சங்கத்தின் மூலம், பூஜ்ய பாதரின் ஜைனேந்திர இலக்கணம், தமிழகத்தில் அறிமுகமாகிப் பரவியது. அந்நூல் பரவிய சூழ்நிலையையே 'ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியன்' என்ற பாயிரத் தொடர் காட்டு கிறது என்று கருதுவர் சிலர். இதன்படி அவர்தம் கருத்து 'கன்னட ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்றாகிறது. அதனால் தொல்காப்பியர் காலம் கி. பி. 470க்குப் பின்பே என்றும் ஆகிறது. இவர்களின் இம்முடி விற்கு 'ஐந்திரம்' என்ற பாயிரக் குறிப்பே தலையாய காரணம் என்பதால், ஐந்திரத்தின் தோற்ற வரலாற்றை விரிவாக விளக்கவேண்டியது இன்றியமையாத தாகிறது.



இக்கருத்தின் அடிப்படை வலிமை அற்றது. ஐந்திரம் என்பது நூலின் உண்மைப் பெயரே அன்று; தொடக்கப் பெயரும் அன்று. 'ஜைனேந்திர சூத்திரப் பாடம்' என்ற நூலிற்குப் பிற்காலத்தில் வந்த பெயரே ஐந்திரம் என்பதா கும். ஐந்திரம் என்பது, ஜைனேந்திரத்திற்கு முன், பாணினீ யத்திற்கு முன் இல்லை என நிறுவப்படின் இக்கருத்துப் பார்வைக்குரிய தாகலாம். அவ்வாறு நிறுவப்படவும் இல்லை. மாறாக, ஐந்திரம், பாணினிக்கு முற்பட்ட பழமை வாய்ந்த இலக்கணக் கோட்பாடு என்று நிறுவுவதற்கு நிரம்ப சான்றுகள் கிடைத்துள்ளன.

**ஐந்திரத்தின் வரலாறு :** சமசுகிருதத்தில், பாணினி தோன்றுவதற்கு முன்பாக எண்பத்தைந்து இலக்கண ஆசிரியர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.[20] ஆக்நி விச்யர், ஆக்நி விச்யானர், ஆக்ராயனர், ஆக்ரேயர், ஆன்யதரேயர், ஆபிசலி, ஆவரகர், உக்யர், உத்தமோத்தரீயர், உதீசியர், அவ்து பராயண, அபமன்யவ, அவ்புசிவி, அவுர்ணவாபா, கரதமாயன, கான்வ, காத்தத்ய, காசகிருஷ்ண, கரச்யப, குணர வாதவ, கவுண்டின்ய, கட்ச, கவுசலீபுத்ர, கிருஷ்திரீயா, கிரவுல்துகி, கார்க்ய, காலவ, கோனார்த்தீய, கவுதம சர்ம சிர, சாக்ரவர்மான, ஜாதூ கர்ணிய, தைதீகி, தைத்திரீயக, தால்பிய, பாஞ்சால, பஸ்கரகாடி, பிராச, பிளாக் சாயன, பிளாக்சி, பாத பீகார, பாப்ரவ்யா கிரம கிருத், பாரத்வச, மாண்டுகேய, மாப கீய, மீமாம்சக, யாஷ்க, வாத்சப்ர. வாத்ஸ்ய, வார்ஸயாயணி, வால்மீகி, வேதமித்ரா, வியாலி, சடபலாச, மவுத்கல்ய, சாகடாயன, சாகபூணி, சாகல பதாகிருத், சாகலா, சாகல்யா, சாகல்யா

20. யுதிஷ்டிர மீமாம்சக். ஐந்திர வியாகரணம். மஞ்சரி. தை. 1972. ப. 12.

ஸ்கவீர, சாங்காயன, சைத்யாயன, சவுனக, சாங்கிருத்திய, சாநாக, ஸ்தால ஸ்தீவின், ஸ்ஸாடாயன, ஹர்த் என்ற விரிவான இலக்கண இலக்கணிப் பட்டியலை அறிஞர்கள் தருகின்றனர்.[21]

சமற்கிருதத்தில் பல இலக்கண மரபுகள் பண்டு தொட்டு இருந்து வருகின்றன. பிரம்மா, சிவன், இந்திரன், பிரஜாபதி, பிருஹஸ்பதி, துவஷ்டா, அயிசலி, பாணினி ஆகியோர் தம் இலக்கண நூல்களின் மூலமாகத் தோற்று வித்த மரபுகள் இவை. ரிக் வேத கல்ப தருமத்தில், பிரமமா, சந்திரன், யமன், ரௌத்தன், வாயு, வருணன், சோமன், விஷ்ணு என்ற எட்டுத் தேவதைகளும் இலக்கண நூல்களை இயற்றிப் பரப்பியதாகக் கூறப் பெற்றிருக்கிறது. போபதேவர் இயற்றிய கவிகல்ப தருமம் என்ற நூலில், இந்திரன், சந்திரன், காசக்ருத்சனன், ஆபிசலி, சாகடாயனன், பாணினி, அமரன், ஜைநேந்திரன், என்ற எட்டு இலக்கண ஆசிரியர்களின் பெயர் சுட்டப்படுகிறது. ஸ்ரீ தத்துவநிதி என்ற வைணவ நூல் ஒன்பது வகை இலக்கண நூல்களை அறிவிக்கிறது. அவையாவன: ஐந்திரம், சாந்திரம், சாககிருத்சனம், கௌமாரம், சாகடாயனம், சாரசுவதம், ஆபிசலம், சாகல்யம், பாணினீயம்.

**எதிர் எதிர் மரபுகள் :** இங்ஙனம், பல இலக்கண மரபுகள் இருந்தாலும் அவற்றில் இரண்டே தலைமை மரபுகளாகப் புழங்கின. ஒன்று : ஐந்திர மரபு ; மற்றொன்று பாணினீய மரபு. சமற்கிருத இலக்கண உலகம் மிகப் பழைய காலத்திலேயே இப்படி இரு மரபுகளாகக்

21. Burnell. A.C Dr. Ibid p. 32, 33.



கிளைத்துவிட்டது. முன்னது இந்திரன் அருளியது ; பின்னது சிவன் அருளியது என்று கதை எழுதப்பட்டது. இவ்விரண்டு மரபும் ஏறத்தாழ எதிர் எதிர் மரபுகளாக, போட்டி மரபுகளாக வளர்க்கப்பட்டன. ஐந்திர மரபு, பொது மக்கள் மொழியை-உலகியல் வழக்கை மையமாக வைத்தியங்கியது; பாணினீய மரபு செய்யுள் வழக்கிற்கு முதன்மை கொடுத்து மிகக் கற்றவர் மட்டுமே விளங்கத் தகும் அமைப்புடையது.

பாணினிக்கு முன்பே பல இலக்கண மரபுகள் இருந்தன என்பது காட்டப்பெற்றது. இவற்றுள் ஒன்றாக ஐந்திர மரபு இருந்தது என்பது வேறு பல சான்றுகளாலும் உறுதி யாகிறது.

*1.* கதாசரித் சாகரம் என்ற என்ற சமற்கிருத நூலின் காலம் கி.பி.10 ஆம் நூற்றாண்டு ஆகும். இந்நூல் கி.பி. முதல் நூற்றாண்டில் குணாட்டியர் என்பவரால் எழுதப்பெற்ற பிருகத் கதை என்ற நூலை முதன்நூலாகக் கொண்டு எழுதப் பெற்றது. சோமதேவ பட்டர் என்பவர் இந்நூலின் ஆசிரியர். காச்மீரத்தைச் சேர்ந்தவர். அந்த அரசனின் மனைவியாகிய சூர்யவதியின் விருப்பத்திற் கிணங்க இந்நூலை எழுதினார். இந்நூலின் மூலச்செய்திகள் பிருகத் கதையில் உள்ளனவே. பிருகத் கதை பைசாச பிராகிருதத்தில் எழுதப்பட்டிருந்தது. பிராகிருத நூலாசிரியர்க்கு ஐந்திரவியாகரணப் பற்று அதிகம் இவர்களுள் ஒருவர் வரருசி காத்தியாயனர். அவர் தமது வாழ்க்கை வரலாற்றைச் சொல்லும் இடத்து, பாணினியையும், ஐந்திர இலக்கண மரபையும் சுட்டி உரைக்கிறார்.[22]

22. கிருஷ்ணன் எச். ஆர். தொல்காப்பியமும், ஐந்திர வியாகரணமும் கலைமகள் திங்கள் இதழ், மார்ச்சு, 1967 ப. 333.

"வருசாசிரியர் என்பவர் என் குரு. அவரிடமே, நானும், பாணினியும் இலக்கணம் பயின்றேம். பாணினி அறிவிலி (சடபுத்தி)யாய் இருந்தான். ஆசிரியருக்கு வேண்டிய தொண்டுகளைக்கூட அவன் ஆற்றுவதில்லை. அதனால், வருசரின் மனைவியார், பாணினியைக் குருகுலத்தினின்று விரட்டி விட்டார். அவனோ தான் ஒரு பெரும்புலவன் ஆதல் வேண்டும் என்று உறுதி கொண்டான். இமயமலையில் சிவபெருமானை நோக்கித் தவம் இருந்தான். நீண்ட பெருந் தவத்திற்குப்பிறகு சிவன் அவனுக்குச் சமசுக்கிருத வியாகரணத்தை அருளினார். வரம் பெற்ற பாணினி என்னை வாதத்திற்கு அழைத்தான். எனக்கும் அவனுக்கும் ஏழு நாட்கள் வாதங்கள் நிகழ்ந்தன. வாதத்தில் நானே வென்றேன். தன் அருள் பெற்ற பாணினி தோற்றது கண்டு, தோற்கடிக்கப்பட்டது கண்டு என்மீது சிவபெருமானின் சீற்றம் பாய்ந்தது. உடனே எங்களுடைய ஐந்திரம் அழிந்தது."

(Thus my Enthira grammar was destroyed on the earth we all conquered by Panini became stupid)

இக்கதை கதாசரித் சாகரத்தில் காணப்பெறுகிறது; கதாசரித் சாசரத்தின் காலம் கி. பி. 10 ஆம் நூற்றாண்டு. எனினும், இந்நூலுக்கு முதல் நூலான பிருகத்கதை கி.பி முதல் நூற்றாண்டைச் சார்ந்தது. ஆதலின் இக்கதையின் காலமும் கி.பி. முதல் நூற்றாண்டு என்பது தெளிவு. அன்றியும் பாணினியின் தோற்றமே, ஐந்திரத்தின் அழிவிற்குக் காரணம் என்பதும் தெளிவாகிறது.

2. கி.பி. 629—645 இல் இந்தியாவில் பயணம் செய்த குவான்-சுவாங் என்ற பயணி இதுபோன்ற கதை ஒன்றைத் தன் பயணக் குறிப்பில் எழுதியுள்ளார்.



3. பசுடோ (Bustow) என்பவர், இதுபோன்ற பிறிதொரு கதையைக் குறிப்பிடுகிறார் சிவன் முதலில் இலக்கணம் செய்தார் எனவும், அதனை ஒட்டி இந்திரன் இலக்கணம் செய்தான் எனவும், இந்திரன் செய்த ஐந்திரத்தைப் பிருகற்பதி கற்றான் எனவும், பின்னர்ப் பாணினி தோன்றித் தன் நூலைச் செய்தான் எனவும், அதன் பின் ஐந்திரம் அழிந்து விட்டது எனவும் இவர்கள் தம் பயணக் குறிப்பில் குறிப்பிடுவர்.[23]

4. குவான்-சுவாங்கைத் தொடர்ந்து இந்தியாவிற்கு வந்த கொய்லி (Hoeili) என்பவரும், என்சாங் (Yenthshong) என்பவரும் இதுபோன்றே பிறிதொரு கதை ஒன்றைக் குறிப்பிடுகின்றனர். நாலந்தாப் பல்கலைக்கழகத்தில் தங்கிச் சமற்கிருதம் பயின்ற அவர்களுடைய குறிப்பு புறக்கணிக்கத் தக்கதன்று. அவர் தரும் குறிப்பாவது,

"பிரமதேவர் தேவர்களுக்குச் சொன்னவற்றை இந்திரன் நூறாயிரம் கிரந்தங்களாகச் சுருக்கினன். காந்தார நாட்டிற்கு அண்மையில் உள்ள, சாலதூரம் என்ற சிற்றூரில் பிறந்த பாணினி, அந்நூலை 8000 கிரந்தங்களில் அடக்கினன். தென்னாட்டில் தோன்றிய பார்ப்பனன் ஒருவன் அதனை 2000 கிரந்தங்களில் அடக்கினன். அந்நூலே இப்போது வடநாட்டில் கற்பிக்கப்படுகிறது."[24]

5. பௌத்த நூல்கள் ஐந்திர இலக்கணத்தைக் குறிப்பிடுகின்றன. சாரிபுத்திரன் என்பவன் சிறுவனாக இருக்கும்போதே ஐந்திர இலக்கணத்தைக் கற்றான் என்று அவதான சதகம் என்ற புத்தநூல் குறிப்பிடுகிறது. திபெத்திய நூல்களும் ஐந்திர இலக்கணத்தைக் குறிப்பிடு

---

23 Burnell A. C The Aindhra school of Sanskrit Grammarians P. 3.

24. Ibid P. 4.

கின்றன. பசுட்டன் (Buston) என்ற திபெத்திய நூலாசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறுர்.

சர்வஞானி, (சிவன்) முதல் இலக்கணத்தைப் படைத்தார். இந்திரன், ஐந்திர வியாகரணத்தைப் படைத்தான். பிரகற்பதி அதனைக் கற்றுன். பாணினியம் தோன்றிய பிறகு ஐந்திரம் அழிந்தது.'' [25]

6. கி.பி 1608இல் திபெத்திய லாமாவான தாரநாதர் இந்தியாவில் புத்த சமய வரலாறுபற்றி அருமையான நூல் ஒன்று எழுதினார். (Tharanatha Thibethian History and Buddhism) அந்நூலில் ஐந்திரம் பற்றிச் சில குறிப்புகளை எழுதியுள்ளார். அவை வருமாறு. [26]

"இந்திர வியாகரணமே மிகப் பழையது. தமிழ் நாட்டில் வழங்கியது. ஆரிய தேசத்தது அன்று, தேவ உலகத்தைச் சேர்ந்தது.

" சப்த வர்மன் என்பான், தனக்கு ஐந்திர வியாகரணம் கற்பித் தருளுமாறு சண்முகக் கடவுளிடம் வேண்டினன். 'சித்தோவர்ண சமாம் நாய' என்று சண்முகக் கடவுள் அடி எடுத்துக் கொடுத்தார். இத்தொடரே கலாப இலக்கணமான காதந்திரத்தில் முதல் சூத்திரமாக இடம் பெற்றிருக்கிறது.

"இந்திர துருவன் என்ற பார்ப்பனன், ஐந்திரம் கற்றவன், அவன் கற்ற ஐந்திரம் 25000 சுலோகங்களை உடையது".

25 Tharanthar Thibethian History and Buddhism. *P* 296.

26. Ibid.



7. போஜசம்பு (கி.பி. 16 ஆம் நூற்றாண்டு) என்ற நூலில், "ஐந்திர வாக் ஈவா" என்ற குறிப்பு இடம் பெற்றுள்ளது. [27]

8. துர்க்காச்சாரியரின் 'நிருக்த விருக்தி' என்ற நூலில், யதார்த்தம்; பதம், ஐந்திரம் எனக் குறிப்பிடப் படுகிறது. [28]

9. சாரஸ்வத வியாகரண உரை இந்திரனே முதல் இலக்கண நூலாசிரியர் என்று குறிப்பிடுகிறது. [29]

"இந்திரா தயோ பி யஸ்யா ந யயு சப்த வாரித்தே
பிராக்ரியான்தஸய க்ருத்ஸநய சமோ
வக்தும் நரோ கதம்"

10. உச்சவல தத்தர் (Ujjvaladatta) என்ற உரை ஆசிரியர், தம் பாணினிய உரைச்சூத்திரங்களுக்கு விளக்கம் எழுதும் போது ஜைனேந்திரத்தை மேற்கோளாகக் காட்டுவர். இவர் காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு. [30]

11 கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒப்ப தேவர், எட்டுச் சமஸ்கிருத இலக்கணிகளைக் குறிப்பிடுவர். அவர்களுள் எட்டாவது இலக்கணியாக இந்திரனைக் குறிப்பிடுவர். [31]

இந்திரச் சந்திர காசக்ருஷ்ண ஆபிசலி சாகடாயன
பாணினி அமர ஜைனேந்திர ஜயந்தி அஸ்தா திசாப்டிகா.
(தாதுபாதம் 2)

27 28. Burnell. A. C., *P* 6.

29. Sayama's Introduction to his Commentary on the Rig Veda Vol. I. *P* 35,

30, 31. Burnell *P* 7

12. சைனரின் இலக்கணப் படைப்புகளுள் தலையாயது சாகடாயனம். இந்நூல் இந்திரனின் இலக்கணக் கோட்பாடு பற்றிக் குறிப்பிடுகிறது.

13. இதற்கு உரை எழுதியவர் யக்சவர்மன் (Yaxawarma) என்பவர் ஆவார். இவர் தமது உரையில் இந்திர ஆச்சாரியனைப் பற்றி விளக்குகிறார். [32]

''ஐராய நஸ் இந்திரஸ் யா
ஐராசப் தஸ்ய தத்ஸம்பந்தினி அன்ய சம்பந்தினி
வா அஜாத சுபி பரே இந்திரஸ்யா
சார்யஸ்ய மதென நசாதெகோ பவதி ஐரசௌ ஐரஷா''
(1, 2, 37, பக்கம் 21)

14. இலங்காவதாரச் சூத்திரம், சோமேச்வர சூரி இயற்றிய யசஸ்திலக சம்பூ என்ற நூல்களிலும் ஐந்திரம் பற்றிய குறிப்பு உள்ளது. [33]

15. கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த, மகாபாரதத்தின் உரையாசிரியர் தேவ போதர், ஐந்திர இலக்கணம் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பாவது. [34]

''ஐந்திர வியாகரணம், பாணினி வியாகரணத்தை விட இருபத்தைந்து மடங்கு பெரியது''

16. பரத முனிவரின் நாட்டிய சாத்திர நூலிலும்,

17. உபமன்யுவின் தத்துவ விமர்சனீ என்ற நூலிலும் ஐந்திரம் சுட்டப்பெற்றுள்ளது. [35]

2. Burnell P 7

33-38. யுதிஷ்டிர மீமாம்சக் ஐந்திர வியாகரணம். ஆதாரம் சமற்கிருத வியாகரணம்-சாந்திர கா இதிகாசம் (இந்தி நூல்) பாரதீய பிராச்ய வித்யா பிரதிஷ்டான், 24—312. ராம் கஞ்ஜ். அஜ்மேர். விலை ரூ. 13. தமிழ்: கௌரி, மஞ்சரி, தை.1972 ப. 12.



18. ஐந்திரத்தை நேராகச் சுட்டவில்லை ஆயினும், இந்திரன் இலக்கணம் பயின்ற செய்தி தொடர்பாக பதஞ்சலியின் மாபாடியம் சிலவற்றைக் குறிப்பிடுகிறது. அது குறிப்பிடுவதாவது : [36]

பிருகற்பதி, இந்திரனுக்குத் தமது இலக்கணச் சாத்திரமான சப்த பாராயணத்தைப் பயிற்றுவித்தார். ஒவ்வொரு சொல்லாக அவனுக்குச் சொல்லிக் கொடுத்தான். ஆயினும் திவ்விய ஆண்டுகள் வரையிலும், இந்திரனுக்குப் பிருகற்பதி, சப்தபாராயணம் போதித்தான்.

19. ப்ரக்ரியா கௌமுதி முதலிய நூல்களிலும் இந்தச் செய்தி குறிப்பிடப் பெறிருக்கிறது. [37]

20. தைத்திரீய சம்கிதை பிறிதொன்றை எடுத்துரைக்கிறது. அப்போது இலக்கண விதிகள் வரையறுக்கப்படவில்லை. இந்திரன் மிகத் துன்பப்பட்டே பயின்றான் பயின்றபின், சப்தங்களின் பகுதி, விகுதி (ப்ருகிருதி, ப்ரத்யயம்) பாகுபாட்டை ஆராய்ந்து கண்டு பிடித்தான்.

தைத்திரீய சம்கிதைக்கு உரை எழுதிய சாயணாசாரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். [38]

(முதல் பிரபாடகம், முதல் அனுவாகம்.

"வாக்கு முன் காலத்தில் விவரிக்கப் பெறாமல் இருந்தது. பகுதி விகுதிகளாகப் பாகுபடுத்தி விளக்கப்படாமல் இருந்தது. தேவர்கள் தம் தலைவன் இந்திரனிடம் வாக்குகளை விளக்குமாறு வேண்டினர். இந்திரன், சப்தங்களைப் பகுதி விகுதிகளாகப் பிரித்து இலக்கணம் வகுத்தான்."

21. ஐந்திரம் பற்றி வான்மீகி இராமாயணத்தில் (உத்தரகாண்டம் 36 ஆம் சருக்கம் 43, 45 ஆம் சுலோகம்)

வரும் குறிப்பும் கருதுவதற்குரியது. 'அநுமானது நீண்ட பேச்சின் இடையில் ஒரு சிறு பிழையும் காணப்படவில்லை. எனவே அநுமன் வியாகரணத்தைப் பலமுறையும் பயின்றிருத்தல் வேண்டும்', என்று அநுமனை இராமன் வியந்து போற்றுகிறான். பிறிதோரிடத்தில், இந்திரன், அநுமனுக்கு வரம் தருகிறான். அவ்வரமாவது: "எப்பொழுது இவனுக்குச் சாத்திரங்களைக் கற்கும் ஆற்றல் ஏற்படுகிறதோ அப்பொழுது இவனுக்குச் சாத்திரத்தைக் கொடுக்கிறேன். அதைப் பெற்று மிகுந்த நாவன்மை உடையவனாக ஆவான். சாத்திரங்களைக் கற்றுப் பெற்ற தேர்ச்சியில் இவனுக்கு ஒப்பாவான் ஒருவனும் இரான். (சருக்கம் 36 சுலோகம் 14). ஈண்டு இடம் பெற்றுள்ள சாத்திரம் என்பதற்குச் "சாத்திரங்களின் பொருள் உணர்ச்சி, அஃதாவது ஐந்திர வியாகரணம் என்று பொருள்" என உரை காண்பர். இதற்குத் தக, கம்பன். தனது இராமாயணத்தில், 'அயிந்திரம் நிறைந்தவன்' என்றே குறிப்பிடுகிறான் (யுத்தகாண்டம் விபீடணன் அடைக்கலப் படலம் 39)

வேதமொரு நாலுடன் விளங்கிய
சடங்கமும் விரிந்தகலையும்
ஓத நிலை வீதிமிசை ஏழுபரி
பூணருணன் ஊரவிரைதேர்
மீதுசெலும் வெங்கதிர வன்றனெடு
அயிந்திர வியாகரணமும்
ஓதியொரு நாளினில் உணர்ந்தனனிம்
மாருதி உயர்ந்த புகழோய்

எனப் பிறிதோர் இராமாயணப் பாடலொன்றை, யாழ்ப்பாணம் கணேசையர் காட்டுவர்.[39]

தமிழ் நூல்களில் ஐந்திரம் பற்றிய குறிப்பு: தமிழில் ஐந்திரம் பற்றிய பரவலான குறிப்புகள் இல்லை. எனினும்

39. கணேசையர் தொல். சேனாவரையம். 1955. ப. XXVI.



ஆங்காங்கே சிற்சில குறிப்புகள் இடம் பெறாமற் போய்விடவில்லை. பிறிதொன்று சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்திரனுக்கும் ஐந்திர நூலிற்கும் தொடர்பு பின்வருமாறு அமைந்து கிடக்கிறது: இந்திரனால் எழுதப்பட்டது அல்லது சொல்லப்பட்டது என்ற கருத்தினது ஐந்திரம் என்பது. ஐந்திரம் பற்றிய குறிப்புகள் சில ஆயினும், இந்திரனைப் பற்றிய குறிப்புகள் பல தமிழின் கண் இடம் பெற்றுள்ளன. அவை இவ்விடத்திற்கு அத்துணை இன்றி அமையாதன அல்ல ஆதலால், ஐந்திரம் பற்றிய குறிப்புகள் மட்டுமே இங்கே தரப்படுகின்றன.

1. தொல்காப்பியத்திற்கு அமைந்துள்ள சிறப்புப் பாயிரத்தை எழுதியவர் பனம்பாரனார். அவர் தம் பாயிரத்தில், தொல்காப்பியரைச் சிறப்பித்துச் சொல்லும் முகமாக, ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று பாராட்டுகிறார். இதுவே தமிழிலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுள்ள மிகத் தொன்மை வாய்ந்த ஐந்திரக் குறிப்பு ஆகும். இவ்வடிக்கு உரை எழுதிய இளம்பூரணர் நச்சினார்க்கினியர் ஆகிய இருவரும், 'ஐந்திர வியாகரணத்தை நிறைய அறிந்த தொல்காப்பியன்" என்றே உரை எழுதுகின்றனர். சேனாவரையரும் 74ஆம் சொல்லதிகார நூற்பா உரையில், 'ஐந்திர நூலார்' எனக் கூறி, மேறகண்ட பாயிரத் தொடருடன் பொருத்திக் காட்டுவர்.

2. வேற்றுமை எட்டு என்பது தொல்காப்பியர் கொள்கை. இதற்கு மாறாக வேற்றுமை ஏழு என்ற கொள்கையும் இருந்திருக்கிறது. அவ்வாறு வேற்றுமை ஏழு என்பார், எட்டாம் வேற்றுமையாகிய, விளிவேற்றுமையை முதல் வேற்றுமையில் அடக்கினார். விளிவேற்றுமை, முதல் வேற்றுமையான பெயர்வேற்றுமையின்

விகாரமே. அன்றித் தனி வேற்றுமை ஆகாது என்று கொண்டனர். இவ்வாறு வேற்றுமை ஏழு என்ற கொள் கைக்கு மாறாக, எட்டு என்று கூறியவன் இந்திரன் ஆவன். இக்குறிப்பு, சேனாவரையர் மேற்கோளாக எடுத்துக்காட்டு வதால் தெரிகிறது. அவர் காட்டும் நூற்பா வருமாறு :

ஏழியன் முறையது எதிர்முக வேற்றுமை
வேறுஎன விளம்பான் பெயரது விகாரம் என்று
ஓதிய புலவனும் உளனொரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்

இப்பாவைச் சேனாவரையர் எடுத்துக்காட்டுவதால், அவர் காலத்தில் ஐந்திரக் கொள்கை தமிழகத்தில் வழங்கி இருக் கிறது என்று தெரிகிறது. அன்றியும், மேற்கண்ட நூற்பா அகத்தியத்தைச் சார்ந்தது என்று அறிஞர் சிலர் கருதுவர்; காட்டுவர். (நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை 291). ஆனல் சேனாவரையர் அவ்வாறு காட்டவில்லை.

3. சிலப்பதிகாரத்தில் இந்திரன் எழுதிய ஐந்திர நூல் சுட்டப் படுகிறது. கவுந்தியுடன், கோவலனும், கண்ணகியும் மதுரை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது, மாடல மறையோன் என்ற வைதிக அந்தணன் அம் மூவரையும் சந்திக்கிறன். கவுந்தியிடம், தன் மறைகளில் ஓதப்பட்ட கருத்துகளை எடுத்துரைத்து நெறிமுறைப் படுத்த முனைகிறன். அதற்கு விடை இறுக்கும் கவுந்தி, மாடல மறையோன் வழிமுறைகளை மறுத்துச் சொல்லு கிறர்.

"நலம்புரி கொள்கை நான்மறையாள!
பிலம்புக வேண்டும் பெற்றி ஈங்கில்லை;
கப்பத்து இந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட்டு இயற்கை விளங்கக் காவாய்."



மாடல மறையோன்,

"புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்"

என்று கூறியதற்கு மாறாக, மேற்கண்டவாறு கவுந்தி கூறினார்.

"தேவர்களிலும் வைத்து ஆயுக் கற்பத்தினை மிகவுடைய இந்திரன் தோற்றுவித்த வியாகரணத்தினை எம்முடைய அருக குமரன் அருளிச் செய்த பரமாகமங்களில் காண்கின்றிலையோ', என்று கவுந்தி விடை இறுப்பதால், இந்திரன் அருளிய வியாகரணம் வேறு; அருகன் அருளிய பரமாகமம் வேறு என்பது உறுதி ஆகிறது. அதனுடன், விண்ணவர் கோமான் விழுநூலான ஐந்திரத்தைக் கவுந்தி மறுத்துரைப்பதும், அருக குமரன் அருளிய பரமாகமத்தைப் புகழ்ந்துரைப்பதும், ஐந்திர வியாகரணம், சைன இலக்கண முறை இல்லையோ என்பதைக் காட்டுகின்றன.

"கற்பம் என்றதனைப் பிராகிருதத்தாற் கப்பம் என்றார். தேவர்களிடைச் சென்று கற்பிக்கும் இந்திரன் என்றுமாம். மெய்ப்பாட்டியற்கை – பரமாகமம். அதில் ஐந்திர வியாகரணம் காணலாம்.', என்று உரைவிளக்கம் தருவர் அடியார்க்கு நல்லார். "பரமாகமத்தில் இந்திரன் நூலினைக் காணலாம்" என்றெழுதுவர் அரும்பத உரை காரர். இவற்றல், இவ்வுரைகாரர்கள் காலத்திலும் 'ஐந்திரம்' கேட்கப்பட்டிருக்கிறது என்பது புலனகிறது.

4. தேவாரத்தில் இந்திரனைப் பற்றிய குறிப்புகள் பல வருகின்றன.[40] அவற்றுள் திருநாவுக்கரசுத் தேவாரத் தில் காணப்படும் குறிப்பு இன்றியமையாதது.

40. திருநாவுக்கரசர் தேவாரம். 17, 177–180

சிவபெருமான், "இந்திரத்தை இனிதாக ஈந்தார் போலும்" என்ற குறிப்புக் கருதத்தக்கது. பாணினிக்கு, மறைந்து போன ஐந்திர வியாகரணம் சிவபெருமானால் அருளப் பட்டது என்ற புராணியின் வரலாற்றுடன் மேற்கண்ட தேவாரச் செய்தியும் இணைத்துப் பார்க்கத்தக்கது

5. கம்பனின் இராமாயணம் வைதிகப் பார்வையில் எழுதப்பட்டது. இராமனின் திரு அவதாரச் சிறப்பைக் கம்பன், தன் சொல்வண்ணங்களால், உயிரோவியமாக வடித்துள்ளான். அக்காவியத்துள் சொல்லின் செல்வனாக வருபவன் அநுமன் ஆவான். அவனைக் கம்பன், "ஐந்திரம் நிறைந்தவன்" என்று பாராட்டுகிறான்.

இயைந்தன இயைந்தன இனைய கூறலும்
மயிந்தலும் துமிந்தலும் என்னும் மாண்பினார்
அயிந்திரம் நிறைந்தவன் ஆணை ஏவலால்
நயம்தெரி காவலர் இருவர் நண்ணினார்

(யுத்தகாண்டம். வீடணன் அடைக்கலப்படலம். 39)

பத்மபுராணம் என்ற சைன இந்தி இராமாயணத்தில் அநுமன் முதலானோர் பேசப்படுகிறார்கள். கம்பனின் இராமாயணம், வைதிக அறம் பரப்ப வந்த நூலே ஆகும். அந்நூலில் அநுமன் சிறந்த இராமபத்தனாகக் காட்டப்படு கிறான். அத்தகு இடத்தில் 'அயிந்திரன் நிறைந்தவன் என அநுமன் காட்டப்படுவதும், இதற்கு எதிராக வான்மீகி இராமாயணத்திலும் அநுமன் ஐந்திரன் அறிந்தவன் என்று சுட்டப்படுகிறது. இவை ஐந்திரத்தின் வைதிக நெருக்கத்தை வற்புறுத்துகின்றன.

வேதங்களில் ஐந்திரம்: தைத்திரிய ஆரண்யகத்தில் ஐந்திரம் சார்ந்த ஒலிநூல் குறிப்புகள் சில இடம் பெற் றுள்ளன. சாந்தோக்கிய உபநிடதத்தில் ஐந்திரத்தைச்



சேர்ந்த சில குறியீடுகள் வழங்கப் பெற்றுள்ளன. ஐதரேயப் பிரமாணத்திலும் சில ஐந்திர வழக்குகள் ஆளப்பட் டுள்ளன. கோபதப் பிரமாணத்தில் (1-24) சில ஐந்திரக் கூறுகள் போற்றப்பட்டுள்ளன.[41] இவை வேத காலத்தி லேயே ஐந்திர வழக்காறுகள் செல்வாக்குப் பெற்றிருந் தமையைக் காட்டுகின்றன. அன்றியும் ஐந்திரத்தை எழுதியதாக அல்லது சொன்னதாகக் கருதப்படும் இந் திரனே; ரிக் வேதத்தின் தலைமை வாய்ந்த கடவுள் என் பதும், சிவனாகிய உருத்திரன் பிற்காலத்தேதான் தலைமை பெற்றான் என்பதும் இங்கே எண்ணத்தக்கன.

இதுவரை காட்டப்பட்ட சான்றுகள் கொண்டு பின் வரும் முடிவுகட்கு வரலாம்.

1. இந்திரன் தலைமை பெற்றிருந்த ரிக் வேத அல்லது அதற்கு முற்பட்ட காலத்தில் இந்திரன் என்பான் இலக் கணம் ஒன்று செய்தான்.

2. இந்திரனால் செய்யப்பட்ட இலக்கணம் என்ப தால் ஐந்திரம் எனச் சமற்கிருத மொழி முறைப்படி வழங் பெற்றது. சிவன் சிவம் சைவன் சைவம்.

3. ஐந்திரம், பொதுமக்களின் மொழிக்கு முதன்மை கொடுத்து, எளிமையான முறையில் (பாணினியம் போலச் செயற்கை கலவாமல்) அமைக்கப்பட்டிருந்தது.

4. ஐந்திரம் தோன்றிய பின்னேதான் பாணினியம் தோன்றியது. கடவுளர்களில், இந்திரனின் முதன்மை வீழ்ந்து, உருத்திரனின் தலைமை தலை எடுத்தது. அச் சூழலில் இந்திரனின் தலைமைக்கு நிகராக அல்லது

41. செந்தமிழ். தொகுதி. 26. ப. 87-96, 199-210 வெள்ளை வாரணனார் க. தொல்காப்பியம் 1970. ப. 79.

எதிராக உருத்திரன் உருவகிக்கப்பட்டான். அவ்வாறு உருவகிக்கப்பட்ட சூழ்நிலையிலேயே சிவன் (உருத்திரன்) பாணினியம் அருளிய கதை தோன்றி இருத்தல் வேண்டும். இவ்வாறு இரண்டு பேரிடையே இருந்த எதிர்முகப் போட்டியைக் கூட்டிக் காட்டல் இந்தியப் பொது மரபாகும். கௌதம - யாஜ்யவல்கியர், வசிட்டர் - விசுவாமித்திரர், பாணினி - வரருசி, அகத்தியர் - தொல்காப்பியச் சண்டைகள் இவ்வாறு உருவானவையே அல்லது உருவாக்கப்பட்டவையே.

5. பாணினியம் தோன்றிய பிறகு ஐந்திரம் அழிந்தது.

6. ஐந்திரம் அழிந்தது எனினும், ஐந்திரத்தின் தாக்கம் பெற்ற இலக்கணங்கள், இந்தியா முழுதும் தோன்றின.

7. பாணினிக்கு முன் சமசுக்கிருதத்தில் இந்தியா முழுதும் செல்வாக்குடன் விளங்கியது ஐந்திரமே. அக்காலத்தில், தமிழரால் அறியப்பட்ட அயல்மொழி சமற்கிருதமே. தொல்காப்பியர் சமற்கிருத மொழியை நன்கு கற்றிருந்தார். ஆதலின் அம் மொழியில் சிறந்து விளங்கிய ஐந்திரவியாகரணத்தையும் நன்கு அறிந்தவராதல் வேண்டும்.

8. தொல்காப்பியர் விரும்பியவாறு, உலக வழக்கிற்கு ஐந்திரம் முதன்மை கொடுத்திருந்தது என்பதும் இதற்குக் காரணம்.

9. தொல்காப்பியர் கற்றறிந்த 'ஐந்திரம்' சைன ஐந்திரமாக இருத்தற் கில்லை. இம் முடிவிற்குக் காரணங்கள்:

(அ) சமற்கிருதத்திலும், தமிழிலும் கிடைத்த இந்திரன், ஐந்திரனைச் பற்றிய பழைய சான்றுகள் பல, சைன சமயத்தைவிட, சைனம் அல்லாத சமயங்களுடன் தான் நெருக்கத் தொடர்புடையனவாக இலங்குகின்றன. சைன ஐந்திரம் பற்றிய சான்றுகள் கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டவையே. அவ்வாறு இருப்பனவும், மிகச் சிலவே. கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கு முன் ஐந்திரமும், ஐந்திரக் கோட்பாட்டு நூல்களும், ஐந்திரச் சுவடுகளும் இருந்ததற்கு வலிமையான சான்றுகள் உள்ளன.

(ஆ) ஐந்திரத்துவப் பூசையை அறிந்தவன் என்பது இலக்கணப் பேராசிரியனுக்குப் புகழ் சூட்டுவதாக இல்லை. இடமும் பொருத்தம் உடையதாக இல்லை. அன்றியும், ஐந்திரத்துவப் பூசையைப் பற்றிய பழைய சான்று எதுவும் கிடைக்கவில்லை.

(இ) நிறைந்த என்பதற்குக் கற்ற என்று பொருள் இல்லை. ஆதலால் ஐந்திரம் என்பது சைனத் துறவிக்குரிய மகா விரதங்கள் ஐந்து (நிறைந்த) என்பது பொருத்தமே. எனினும், ஐந்திர வியாகரணம் கற்றவன் என்ற பொருளிலேயே கம்பன் 'ஐந்திரன் நிறைந்தவன்' என்ற தொடரை ஆண்டுள்ளான் என்பதுவும், ஐந்திரம் நிறைந்த என்பதை ஐந்திரக் கல்வியால் நிறைந்தவன் என்று விரித்துப் பொருள் கொள்ளுதல் தமிழ் மரபே என்பதுவும் மேற்கண்ட கருத்தை வலிமை இழக்கச் செய்கின்றன.

(ஈ) விண்ணவர் கோமான் விழுநூல் என மாடலமறையோனால் புகழப் பெறும் ஐந்திர வியாகரணத்தை, சைனத் துறவியாகிய கவுந்தி அடிகள் பொருட் படுத்தவில்லை என்பது சிலப்பதிகாரத்தால் தெளிவாகிறது. எனவே பழைய ஐந்திரம் சைனரால் புறக்கணிக்கப்பட்டது என்பது உறுதியாகிறது.

2

# ஐந்திரமும் தொல்காப்பியமும்

ஐந்திரமும், பாணினியமும் ஒத்த கோட்பாட்டு (School) நூல்கள் அல்ல. இரண்டும் எதிர் எதிரானவை. மேலே காட்டிய சான்றுகள் சில, புனைவை அடிப்படையாகக் கொண்ட புராணங்களில் இடம் பெற்றவை. எனினும், அவை ஏதேனும் ஓர் அடிப்படை உண்மையைக் கருவாகக் கொண்டு பெருக்கப் பட்டவையே என்று உய்த்துணரலாம். அவ்வடிப்படை உண்மை எது ? ஐந்திரமும் பாணினியமும் ஒத்த நோக்கின அல்ல ; போக்கின அல்ல என்பதுதான். நச்சினார்க்கினியர் காட்டும் அகத்தியர்—தொல்காப்பியர் சண்டை கூட இந்த உய்த்துணர்வை உறுதிப்படுத்து கிறது எனலாம். அகத்தியரின் வடபுல வாழ்வையும், வடமொழி இலக்கணி பாணினியையும் இணைத்து நினைத்தால் பாணினி அகத்தியச் சார்பினர் எனலாம். எனவே பாணினியச் சார்பிற்கு எதிரான ஐந்திரத்தை அகத்தியர் எதிர்த்தவராதல் வேண்டும். ஆகவே ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியரையும் எதிர்த்திருத்தல் வேண்டும். அகத்தியர் கதை உண்மையோ, இல்லையோ, அக்கதை ஐந்திரப் பாணினிய எதிர்முகத்தை மறைமுகமாக உள்ளடக்கியது எனலாம். ஆக இக்கதைக் கருக்கள் அனைத்தும் தொல்காப்பியர்தம் ஐந்திர அறிவை வற்புறுத்துவன.



தொல்காப்பியர் ஐந்திரத்தைப் பயின்றிருந்தார் எனின், ஐந்திரத் தாக்கம் ஏதேனும் தொல்காப்பியத்தில் உள்ளதா என்பது ஆராய்ச்சிக் குரியது. இதனைத் தெளிவாக அறிய ஐந்திர மூல நூல் எதுவும் இல்லை. எனினும் இரண்டு நூற்பாக்கள் ஐந்திர நூற்பாக்கள் என மேற்கோளாகக் காட்டப்படுகின்றன. கி. மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்தவர் பட்டாரக அரிச்சந்திரர் என்பவர். அவர் தம்'சரக நியாசம்' என்ற உரைநூலில். ஐந்திர நூற்பா ஒன்றை மேற்கோளாகக் காட்டுகிறார். அது பின் வருமாறு.

**'அத வர்ண சமூக'**

ஐந்திர வியாகரணத்தின் தொடக்க இயல் நூற்பாவாக இது எடுத்துக் காட்டப்படுகிறது, (பிறகு) எழுத்துக்களின் கூட்டம்' என்பது இதன் பொருள். எழுத்துகளைப் பற்றித் தொடக்கத்தில் குறிப்பது கருதத்தக்கது[1]. ஓரொலியில் மற்றோர் ஒலியையும் ஒருங்கு சேர்த்தல் என்பது கூட்டம் என்பதற்குரிய விளக்கமாகும். செம்பினையும், ஈயத்தையும் உருக்கி அமைத்த வெண்கலத்தில் அவ்விரண்டு பொருளும் வேறு பிரித்தறிய முடியாத படி ஒன்றேயாகத் தோன்றுதல் போல, இரண்டு ஒலிகளின் சேர்க்கையால் ஓரொலியேயாய்க் கேட்பது, சமற்கிருதத்தில் ஏகார ஓகாரங்கள் கூட்டெழுத்துகள் என விளக்கப் பெறும். தமிழில் இத்தகைய கூட்டு இல்லை. எனினும் தொல்காப்பியர், அ+இ|ய்=ஐ என்பதும் (54. 56), அ+உ/வ்=ஔ (55, 56.) என்பதும் இங்கே எண்ணத் தக்கன.

1. யுதிஷ்டிர மீமாம்சக். ஐந்திர வியாகரணம். மஞ்சரி. தை. 1972 ப.12

அர்த்த பதம்

என்பது பிறிதோர் ஐந்திர நூற்பா. இந்நூற்பாவைத் துர்க்காசார்யர் தம் 'நிருக்த விருத்தி'யில் எடுத்துக் காட்டு கிறார்.

'நைகம் பசஜாதம், யதா. 'அர்த்த பதம்' இத்யைந்த் ராணாம்' என ஐந்திர வியாகரணத்தார் கூறுவது போல" என்பது துர்க்காசார்யரின் கூற்று. ஓர் எழுத்த பதம் காது; பொருள் படைத்த எழுத்துகளின் சேர்க்கையே பதம்–சொல் என்பது இதன் கருத்து. இவ்வைந்திர நூறபாவை சுஷேண வித்யா பூசணர் என்பவரும் தம் 'கலாப சந்திர' நூலில் எடுத்துக் காட்டுகிறார்.[2]

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல் பெயரியல்-1) என்ற தொல்காப்பிய நூற்பாவும் 'அர்த்த பதம்' என்ற ஐந்திர நூற்பாவும் இணைத்து நோக்கத் தக்கவை.

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம்

(நன்னூல் 128)

எனவரும் நன்னூல் கருத்தும் இங்கே ஒத்துவைத்து நோக்கத் தக்கது. இவ்விரு நூற்பாக்களைத் தவிர, ஐந்திரத்தைச் சார்ந்த பிற நூற்பாக்கள் எதுவும் இன்று வரை கண்டறியப்பட வில்லை.

எனினும், ஐந்திரச் சார்பு நூல்களாக, சில நூல்கள் கண்டறியப் பட்டுள்ளன. காதந்திரம் என்ற சமற்கிருத இலக்கணமும், கச்சாயனரின் பாலி இலக்கணமும் இவற்றுள் தலைமையாகக் குறிப்பிடத் தக்கவை. இவ்

2. யுதிஷ்டிர மீமாம்சக். மே. கா. நூ.



விரண்டுடன் தொல்காப்பியத்தையும் சேர்த்துக் கொள் கிறார் டாக்டர். ஏ. சி. பர்ணல். நன்னூல், ஐந்திரத் தாக்கம் பெற்ற காதந்திரத்தைப் பின்பற்றியது என்பர் பர்ணல். தம் கருத்தை நிறுவ, தொல்காப்பிய, காதந்திரம், கச்சாயனம் என்ற மூன்று நூல்களின் உட்பாகுபாட்டுப் பொருத்தங்களைச் சான்றாக எடுத்துரைப்பர். அவர் உரைப்பது கருதுதற் குரியது.[3] பார்க்க: அட்டவணை பக்கம். 46, 47

பர்ணல் காட்டியதைப் போன்று சில ஒற்றுமைகள் தொல்காப்பியம், காதந்திரம், கச்சாயனம் ஆகியவற்றின் இடையே காணப்படுதல் உண்மையே. ஒற்றுமைகள் அன்றி வேற்றுமைகளும் இவற்றின் இடையே உள்ளன என்பதும் இங்கே சுட்டத்தக்கது.

1. அதிகாரப் பெயர் வைப்பில்—பெரும்பாகுபாடுகளில் ஒற்றுமை உளதா? எனில் இல்லை. தொல்காப்பியர் எழுத்ததிகாரம் என்றே அமைக்க ஏனையவர் சந்திப் பிரகணம், சந்திக்கப்பம் என்றே அமைத்துள்ளனர். சொல் லதிகாரம் என்பது தொல்காப்பியப் பெயர். பிற இரண் டிலும் பெயர் என்ற பொருளை உடைய 'நாமம்' என்ற சொல் போற்றப் பட்டுள்ளது.

2. உட்பாகுபாடுகளிலும் குறிப்பிடத்தக்க சில வேறு பாடுகள் உள்ளன. தொல்காப்பியர், எழுத்ததிகாரத்தை ஒன்பது இயல்களாகப் பிரிக்க, பிறர் ஐந்து பிரிவுகளாகவே பிரித்துள்ளனர். ஐந்து என்ற பிரிவின் செல்வாக்கு நன்னூலில் அமைந்து கிடக்கிறது. ஒன்பது என்ற பாகுபாடு பிறவற்றில் அமையவில்லை.

3. தொல்காப்பியத்தில் பொருளதிகாரமே கருவறை. எழுத்தும், சொல்லும் வாயில்களே. இத்தகு பொருளதி கார அமைப்பு, அங்கு இல்லை.

3. Burnell. A. C. Dr. P. 10

தொல்காப்பியம், காதந்திரம், காச்சாயனம் நூல் பிரிவுகள்

| Tholkaappiyam | Kaatantraa | Kaaccaynaa |
|---|---|---|
| A. Eluthathikaaram | Sandhi-Prakarana | Sandi-Kappa |
| 1. Description of Alphabet, enumeration of Letters and classes of Letters | 1. Description of Alphabet enumeration of Letters, and classes of Letters | 1. Description of Alphabet, ennmeration of Letters, and classes of Letters |
| 2. Peculiar letters | 2. Sandhi of vowels | 2. Sandhi of vowels |
| 4. Pronunciation | 3. Exceptions | 3. Exceptions |
| 4 5. Sandhi | 4. Sandhi of consonants | 4. Sandhi of niggahiitam |
| 6. Sandhi of case terminations in nouns | 5. , | 5. Sandhi of prepositions |
| 7. Sandhi of final vowels | | |
| 8. ,, consonants | | |
| 8. ,, shortened 'u' | | |

| | | |
|---|---|---|
| B. Sollathikaaram | Naamcatushtaya etc. | Naama-Kappa etc. |
| 1. General | 1. Technical terms for cases terminations; Inflection | 1. Case terminations and inflection of nouns, |
| 2. Cases and their meanings | 2. ,, | 2. Pronouns etc. |
| 3. Substitution of cases | 3. Pronouns | 3. Irregular nouns. |
| 4. Vocative case | 4 Kaaraka | 4. ,, |
| 5. Of nouns | 5. Samaasa | 5. Substitutes far cases, degrees of comparison |
| 6. Verbs | 6. Taddhitaa | 6. Kaaraka |
| 7. On Particles | 1—8: Classes of verbs etc. | 7. Samaasa |
| 8. On Peculiar words | | 8. Taddhita |
| 9. Construction etc. | | 1-4 : Classes of verbs etc. |

எவ்வகைத் தலைமை ஒற்றுமையும் இல்லை. சில பொது ஒற்றுமைகள் மட்டுமே இருக்கின்றன. அவை பொதுவானவை. மாந்தர் ஒவ்வொருவர்க்கும் கண் முதலாய உறுப்புகள் முதன்மையாதல் போல, மொழி அனைத்திலும் எழுத்து முதலானவை முதன்மையாகப் போற்றப்பட்டிருப்பதில் வியப்பொன்றும் இல்லை. பர்ணல் காட்டுவதில் உள்ள இவ்வொற்றுமைகள் அத்துணை வலிமையானவை அல்ல. ஆனால் இரண்டு கருத்துகள் சிறப்பாகக் கருதத்தக்கன.

1. பாணினிய வைப்பு முறை தெளிவற்றது. குழப்பமானது. தொல்காப்பியம் முதலான நூல்களின் வைப்பு முறை தெளிவானது. குழப்பமற்றது.[4]

2. பாணினிய வைப்பொழுங்கும், தொல்காப்பியம் முதலான நூல்களின் வைப்பொழுங்கும் தொடர்பற்றவை.

பாணினியம் எட்டுப் பெரும் பிரிவுகளை உடையது. அதனால் 'அஷ்டாத் யாயீ' என்றே அதற்கொரு பெயர் வழங்குகிறது. 1: கலைச் சொற்களைப் பற்றிய விளக்கம் ஆத்மநேய பதம், பரசமை பதம் முதலாயின, 2: வேற்றுமை, 3, 4, 5: பெயரையும் வினையையும் உண்டாக்கும் உருபுகள். 6, 7: ஒலியழுத்தம், சொல்லமைவுகள் (accent, Augmeut etc) 8 : சிறப்பு விதிகள் முதலாயின. ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு பாதங்கள்; 3981 சூத்திரங்களும் இவ்வாறு முப்பத்திரண்டு பாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் இருபத்தொன்பது பாதங்கள் ஒரு பகுதி, எஞ்சிய

4. Thus the Aindhra grammars are on a simpler and more natural plan which is under stood at first sight, while Paaninis Grammar is except to the initiated, in hopeless confusion. Dr. A. C, Burnell. Ibid. P. I.



மூன்று பாதங்களும் தனிப்பகுதி. இப்பிரிவின் ஒழுங்கிற்கும் தொல்காப்பிய வைப்பொழுங்கிற்கும் ஒரு தொடர்பும் இல்லை என்பது வெள்ளிடை.

தொல்காப்பியத்திற்கும், காதந்திரம் முதலான ஐந்திரச் சார்பு நூல்களுக்கும் இடையே பர்ணல் காட்டுகிற பிற ஒற்றுமைகள் பார்வைக்குரியன.

1. தொல்காப்பியர், பெயர், வினை என்ற இரண்டும் சொல்லின் தலைமைப் பாகுபாடு என்றும், இடை, உரி என்ற இரண்டும் அவற்றைச் சார்ந்து வருவன என்றும் குறிப்பிடுகிறார் (பெயரியல் 156). இவ்வமைப்பு நாமன், ஆகயாத, உபசர்க்கம், நிபாதம் என யாஷ்கரின் நிருக்தத்தில் காணப்படுகிறது. (1:1) இவையே காதந்திரத்திலும், (II. 5. 1) காச்சாயனத்திலும் (IV. 1, I, 5 10) சுட்டப்படுகின்றன. ஆனால் இவற்றில் சொல் நான்கு என்று சுட்டப்படவில்லை. நாமன், ஆகயாத, உபசர்க்கம் என்ற மூன்றும் வெவ்வேறிடங்களில் சுட்டப்படுகின்றன. அவ்வளவே! அவற்றிலும் உரிச்சொல்லிற்கு இணையாகக் கூறப்படும் நிபாதம் கூறப்படவில்லை. பிராதி சாக்கியத்தில் (ரிக் XII 5.8) இவை குறிப்பிடப்படுகின்றன. பெயர்ச் சொல் வினைச் சொல் என்பன, நாமபதம், கிரியா (ஆக்யாத) பதம் என்பவற்றின் மொழி பெயர்ப்பு என்பர் பர்ணல்[5]. இங்கே இடைச் சொல்,

5. 6 The first point to be remarked is the fourfold division of words (pada, into : naman (noun), akhyata (verb), upasarga (preposition), and nipata (particle). This division is found in Yaska, and the terms occur in the Katantra, and the Praticakhyas. In Tamil the four classes of words are called peyarssol, vinaissol, idaissol and urissol; litterally name-word, act-word, middle-word, peculiar word. The first is a literal translation

உரிச் சொல் என்ற இரண்டிற்கும் இணையான ஐந்திர மேற்கோள் இல்லை என்பதை அவரே ஒப்புக் கொள்ளுகிறார்.

2. சொல்' என்பதைப் பதம் என்றே ஐந்திரச் சார்பு இலக்கணநூல்கள் மொழியும். பவணந்தி பதவியல் என்பதும், பகுபதம், பகாப்பதம் என்பதும் சமற்கிருதத் தாக்கம் என்பதில் ஐயமில்லை.[7]

3. தொல்காப்பியம் உயிரெழுத்து என்று போற்றுகிறது. காதந்திரத்திலும் (I 1. 2,7 etc), பிராதிசாக்கியத்திலும் (Rig. Pr. 1. 1 Taitt. Pr. 1. 5, Atharva Pr. 1. 4, Kaatyaniiya. Pr. 1.39, Panini ciyaa. 4), கச்சாயனத்திலும் எழுத்துகள் உயிர் என்ற பொருளில் 'ஸ்வர' என்றும், பாலிமொழியில் 'சார' என்றும் வழங்குகின்றன. ஸ்வர என்பதன் பொருள் உயிர்த்தல் என்பதாகும்.[8]

---

of the Sanskrit nama (pada), the second is for kriya ; akhyata being, apparently, untranslatable in Tamil. The two last differ from the Aindra terms, but for the reason that the Tamil language has nothing correspon-ding to the prepositions and particles of Sanskrit. Idaissol means middle-word, and is the name of affixes and the letters inserted between the root and suffix to express the tense; urissol 'peculiar word' is the name of adjectives and adverbs. In Tamil there are no prepositions or prefixes. Pada occurs in all these works as the term for a word. Burnell. P. 12,13

---

7. 8. As regards the terms relating to phonetics the identity is nearly complete. In the Tolkappiyam a vowel is called uyir, that is, 'breath' or life'. In the Katantra, in the Praticakhyas and Kaccayana, svara



or sar (in Pali) is used for 'vowel'. This word is obviously the original of 'uyir' svara means sound and breath also. A consonant in Tolkappiyam is 'mey' 'feeling' (the sense) or 'body'; that is an evident translation of the Sanskrit sparce which is a name of the consonants k to m. The Katantra and Kaccayana use only the *general* term for all the consonants—vyanjana—which appears in the Praticakhyas with the same sense. European students of the Tamil grammar without exception appear to have been ignorant that it is a mere adaptation from the Sanskrit, and have invented a pretty little allegory about consonants being the body and vowels the life, which thus falls to the ground: for the terms used, in reality, refer to the physiological nature of the sounds and are scientific not fanciful. Vowels are 'short' (Kuril= hrasva) and 'long' (nedil=dirgha). The Tamil Grammar divides the consonants in to vali 'strong', meli 'soft', and idai or 'medial'. The first (k, s, t, t, p) and second (n, n, n, n, m) do not correspond to the aghosha and gho havat classes of the Sanskrit and Pali Grammars ; the difference in name is owing to the peculiar phonetic system of Tamil which differes altogether from the Sanskrit. The idai (or medial) letters (y, r, l, v, l, and l) correspond with the Sanskrit antahsthah and the Tamil name is an exact translation of the Sanskrit. Letters are said in the Tamil to belong to an inam or class (=Varga). The Sanskrit works have a term for the sibilants (ushmanah) which is common to them, but the Tamil and Pali phonetic systems want corresponding classes. The term for the union of one letter with another is in

4. தொல்காப்பியர் மெய் எனக் குறிப்பது ஐந்திரச் சார்பு நூலில் 'ஸ்பரிசம்' என்று குறிப்பதற்கு இணையான தாகும். சமற்கிருதத்தில் 'வியஞ்சனம' என்று மெய்யைக் குறிப்பது இதே பொருளில்தான்.[8] ஸ்பரிசம் (தொடு உணர்வு) என்பதற்கும் உடல் என்ற மெய் என்ற சொல் லிற்கும் பொருத்தம் இருப்பதாகத் தெரியவில்லை. 'ஸ்வரம்' என்ற சமற்கிருதச் சொல்லிற்கு நேர்ப் பொருள் 'பிற உதவி இன்றி நேரே ஒலிப்பது' என்பதுதான். வியஞ்சனம் என்பதற்குப் பிற உதவியால் வெளிப்படுக்கப் படுவது என்றே பொருள். தமிழில் உயிர்த்தல் - மூச்சு விடுதல் என்ற வினையடியைச் சார்ந்தது 'உயிர்' என்ற பெயர். உயிரைச் சார்ந்தே உடல் இயங்கும் என்ற கருத் தினது மெய் என்ற பெயர். உயிர், உடல் என்ற தொடர்பு, அவற்றினூடே உள்ள பொருத்தம் சமற்கிருதப் பெயர் அமைப்பில் இல்லாமை தெளிவு.

5. மெய் வகைகளுள் ஒன்றான இடை எழுத்து என்ற பாகுபாடு 'அந்தஸ்தா' என்ற சமற்கிருதப் பெயரின் பெயர்ப்பு என்பர். பர்ணல் (Kaat. I I. 14 Rig. pr. 1. 2. Atharva. pr. i. 30. Kaaty. pr. III 129 ; Pratijiha suutra. 9, 17. Paaniini Ciyaa 7.)

6. வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற குறி யீடுகள் வர்க்கம் என்ற சமற்கிருதத்தின் பெயர்ப்பு என்பர்

---

all the Sanskrit works and in Ka cayana also, Sandhi the same is preserved in the Tamil santi.

As regards the names of letters the Tolkappiyam affixes-agaram to consonants, 'garam' to short vowels and 'garam' to long. This is obviously an extended application of the use of kaara which occurs in all the Sanskrit treatises including Paninis. Burnell .P. 13 - 15



பர்ணல். இனம் என்ற குறியீட்டைத் தொல்காப்பியர் வழங்கவில்லை. அதனைப் பிற்கால நூலாரே வழங்கினர். காச்சாயனர், அ, ஆ தவிர்த்த பிற உயிர்களை ஸ்வரம் என்று குறிப்பதில்லை. 'நாமின்' என்றே குறிப்பர். 'அ' உள்ளிட்ட 'ல்ரி' வரையுள்ள உயிர்களைச் 'சமான' என்பர்.

7. கரம், காரம் என்ற எழுத்துச் சாரியைகள் சமற் கிருதச் சார்பின என்பர் பர்ணல்.

8. பிறப்பு இடம் என்று தொல்காப்பியர் குறிப்பது (31) 'ஸ்தானம்' என்பதன் பெயர்ப்பு (Rig. Pr. 1, 10, 11 Tat II Pr: II 81, Atharva Pr. 41, Kaaty pr. 1·43) என்றும், முயற்சி என்பது பிரயத்தனம் (Rig pr XIV 10 Tai Pr. XVII. 6. Paaniciyaa 1?) என்பதன் பெயர்ப் பென்றும், பவணந்தி குறிக்கும் உரம், கண்டம், உச்சி என்பன நேர் மொழி பெயர்ப்புகள் என்றும் கருதுவர் பர்ணல்.

9. மாத்திரை என்ற தொல்காப்பியக் குறியீடு, பாணினி யத்தில் இல்லை. விளக்கும் முறையிலும் இரண்டும் பொருந்தி வரவில்லை என்பர் பர்ணல்[9]

---

9,10. The length of utterance of a letter is marked by one or more mattirai, which is the Tamil form of the Sanskrit matra. This term does not occur in Panini.

Coming to the technical words relating to inflection, it is again evident that the Tamil terms are nothing but translations of the Sanskirit. The term for case in the Tolkappiyam is verrumai-'distinguishing'; this is the obvious translation of the Sanskrit vibhakti, which is common to all the works I have grouped together. The cases in Tamil are first, second etc., answering to the Sanskrit prathama, dvitiya etc, and the number and

10. வேற்றுமை என்பது 'விபக்தி' என்பதன் பெயர்ப்பு என்பர் பர்ணல். பிரதமா, திவீதியா, திரிதீயா, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி என்ற எண்ணடிப் படையில் செய்த வேற்றுமைப் பிரிவுகளின் தாக்கமே தமிழ் வேற்றுமைப் பகுப்பு என்பர். காதந்திர இலக் கணத்தில் எட்டாம் வேற்றுமை அழைத்தல் என்ற பொருளில், 'ஆமந்தரீத' அல்லது 'ஆமந்த்ரன' என்று குறிக் கப்படும். தொல்காப்பியரும் விளிவேற்றுமை என்று எட்டாம் வேற்றுமையைப் போற்றுகிறார்.[11]

11. வினை என்பதுவும், ஏவல் வினை என்பதுவும், தன்வினை என்பதுவும் கிரியா, வர்த்தமான கால, பரசகால ஆத்மனை பதம், பரஸ்மைபதம் என்பவற்றின் பெயர்ப்பு என்பர்.[12]

12 சாரியை என்பது ஆகம என்ற சமற்கிருதப் பெயர்ப்பு ஏன்பர்.

13. திரிபுகளுள் ஒன்றான கெடுதல் என்பது சமற்கிரு தத்தில் உள்ள 'லோபம்' என்பதன் தமிழாக்கம் என்பர்.

---

use of the cases is made to agree with that of the Sanskrit Grammer, though very unnecessarily. Thus seven eases and the vocative, or eight are reckoned. In the Katantra etc., the vocative is called amantrita or amantrana; in Tamil it is called vili or 'calling' the exact translation of the former. Burnell P.16

---

11. The technical terms with regard to verbs also show much the same likeness in the Tamil Grammer on the one hand, and the Katantra and the like on the other. Ibid. P.17



கெடுதல் என்பது பவணந்தியின் ஆட்சியே தவிர தொல் காப்பியர் ஆட்சி இல்லை.

14. [12] வர்ணம் ஸ்வரம், மாத்திரை என்பன ஐந்திரச் சொற்கள் என்பர். சாந்தோக்கிய உபநிடதம், ஸ்பரிசம், ஸ்வரம், ஊஷ்மன் என்பவற்றை ஐந்திரச் சொற்களாகக் குறிப்பிடும். சதபத பிராமணம், ஏகவசனம் பகுவசனம் என்பன ஐந்திரச் சொற்கள் என்று சுட்டுகிறது. ஐத்ரேய பிராமணம், அட்சரம், அட்சர பங்க்தி, சதுர்ட்சரா, வர்ண, காரம், பதம் என்பவற்றை ஐந்திரச் சார்பினவாகக் குறிக் கிறது. கொபத பிராமணம் ஐந்திரச் சொற்களைப் பயன் படுத்துகிறது. அது பயன்படுத்துவன: அட்சர, த்விவர்ண வர்ண, சதுர்மாத்திர, அகார, ஏகாட்சர. பேராசிரியர் வேபர் (Prof. Weber) வியஞ்சன, ஓகாரம், மகாரம், தாலுஸ் தானம், ஓஸ்தியா ஸ்தானம், புலுதம், திரிமாத்திரா, சந்தியட் சரம், பிரக்ரியா, நாமம் என்பன வேதகால கல்பச் சூத்திரங் களில் பயன்படுத்தப்பட்டுள்ள ஐந்திரச் சொற்கள் என்பர். சமற்கிருதத்தில், மிகப்பழமையான நூல்களில் ஐந்திரக் கலைச் சொற்களும், கருத்துகளும் பயன்படுத்தப்பட்டிருக் கின்றன என்பது பர்ணல் கருத்து, தொல்காப்பியம், நேர் முகமாக, பிற சமற்கிருத நூல்களைச் சார்ந்து பெறாமல், ஐந்திர நூல்களைச் சார்ந்தே மேற்கண்ட தாக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது பர்ணல் முடிவு.

---

12. The above comparison of the Technical terms of the Tolkappiyam on the one hand, and the Katantra etc. on the other, will, I think establish the general identity of system of all these grammars, as I have already stated. The comparison (to a limited extent) with the terms used by Panini prove that these last are far more artificial and precise and, therefore, more recent than

the former. The relation of the two is just the same as that between the mediaeval notation of algebraic probelems and the modern system. Where, for example, Cardan wrote 'cosa' and 'census' we now put x and $x^2$. So where the Aindra Grammars have an ordinary word used in a technical sense, Panini mostly has a mer-symbol. Is the series of technical terms that I have just discussed be considered, it will clearly be seen that the terms used in the Tolkappiam, Katantra, and Kaccayana all hang together as parts of one system, and that the resemblance holds good throughout.

Burnell. P. 18 to 19

In the above list I have purposely excluded varnas and axaras as these terms, though common to the Sanskrit treatises, are not represented in the Tamil which has eluttu in their place, a word that can be best translated by likhita. As I have shown elsewhere, there are strong *reasons for believing that the Tamil people had an independent system of writingin use before their lanugage was analysed by grammarians from the north.* The terms relating to samase are older than Panini, but do not occur in the Tamil Grammer. Ibid. P.20

It is perhaps worth while to point out that the ultimate source of the earliest Tamil grammer must be a Sanskrit, and not a Pali original. As far as the Sanskrit words go, it is impossible to prove this, for in Tamil they assume much the same if not the identical from that they have in Pali. But I have shown elsewhere that in the 7th century A. D. the predominant sect in S. India was that of the Nirgranthas or Digambara Jains, and Tolkappiyan was most probably of this sect.

Ibid P. 56



*15.* மயக்கம் என்பது சமயோகம் என்பதன் பெயர்ப்பு என்பர் பர்ணல். ரிக் வேதப் பிராதி சாக்கியத்திலும் (I.7) தைத்திரீயப் பிராதிசாக்கியத்திலும் (XXI. 4), அதர்வ வேதப் பிராதிசாக்கியத்திலும் (I. *51*) சமயோகம் குறிப்பிடப்படுகிறது.

**ஐந்திரமும், தொல்காப்பிய உரையாசிரியர்களும் :** இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், சிவஞானமுனிவர் ஆகிய உரைகாரர்கள் ஐந்திரத்தைக் குறிப்பிடுகின்றனர். 'ஐந்திரம் நிறைந்த' என்ற பாயிரத் தொடருக்கு, 'இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணத்தினை நிறைய அறிந்த' என இளம்பூரணர் உரை விளக்கம் தருவர். நச்சினார்க்கினியரும் அவ்வாறே. தொல்காப்பியத்தின் முதனூல் அகத்தியமா ஐந்திரமா என்ற வினாவை எழுப்பி, அகத்தியமே முதனூல் என விடை இறுப்பர் சிவஞான முனிவர். ஆனால் பாயிரம் 'அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன்' எனக் குறிப்பிடாது, 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனக் குறிப்பிடுகிறது. இதற்கு அமைதி கூறுகிறார் முனிவர்.

"அற்றேல் அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன் என்னாது ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்றதென்னை எனின் — அகத்தியம் நிறைந்தமை எல்லாரானும் தெளியப்பட்டமையின் வடமொழியினும் வல்லன் ஆயினான் என்பது விளக்கிய, அங்ஙனம் கூறினார் என்பது. இவ்வாறன்றி ஐந்திரத்தின் வழித் தோன்றிய நூலென்பது விளக்கிய ஐந்திர நிறைந்த தொல்காப்பியன் என்றார் என்பாரை, ஐந்திர நிறைந்த தொல்காப்பியன் எனவே ஐந்திரம் முதல் நூல் என்பது அமைந்திருப்ப முந்து நூல் கண்டு எனக் கூறியது எற்றுக்கெனவும் கூறி மறுக்க.

(தொல்காப்பியப் பாயிர விருத்தி. ப. *8*)

பாணினீயம் முதலியம் வியாகரணங்களும் உளவாக ஐந்திர நிறைந்த தொல்காப்பியன் என்றார், 'பெயரது விகாரம் என்று, ஓதிய புலவனும் உளன், எனப் பிறர் மதங்கூறி, 'இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்' என இந்திரன் ஓதியதனைத் தம் துணிபாகக் கொண்ட

அகத்தியனார்க்கு ஐந்திரமே உடன்பாடு என்பது பெறப் படுதலின் அதுவே தொல்காப்பியர்க்கு உடன்பாடு என்பது பற்றிப் போலும் என்க.

(தொல். பாயிர விருத்தி. ப. 12)

இவற்றால், அகத்தியனாரும் ஐந்திரக் கொள்கையினர் என்றாகிறது. இதனை, விரிவாகச் சேனாவரையர் தம் உரையில் எடுத்துக் காட்டி விளக்குகிறார் வேற்றுமை ஏழ் என்பது ஒருகொள்கை. எட்டு என்பது பிறிதொரு கொள்கை. (இந்நூல் பக்.36 பார்க்க). விளிவேற்றுமையைப் பெயரது விகாரம் எனக்கொண்டு முதல் வேற்றுமையில் அடக்குவார் வேற்றுமை ஏழே என்றனர். அதனைத் தனிவேற்றுமையாகக் கொண்டு எட்டாம் வேற்றுமையாகப் போற்றுவர் பிற கொள்கையாளர். எட்டு என்று கூறுவது ஐந்திர மதம். இக்கொள்கையினரே தொல்காப்பியர் என்பது 'விளியொடு எட்டே' (சொல். 63) என்ற அவர் கூற்றாலும், விளி மரபைத் தனியியலாகப் போற்றுவதாலும் அறியலாம்.

விளியை 'மரபு' என்ற பெயரிட்டு அழைப்பதன் நுணுக்கம் காண்க: இதன் ஆழத்தை அறிந்த சேனாவரையர் தம் முரையில், 'ஏழியல் .... இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்' என்ற நூற்பாவைக் காட்டி, **'ஐந்திர நூலார் விளிவேற்றுமையை எட்டாம் வேற்றுமையாக நேர்ந் தார் என்பது** பெறப்படும்' என்று விளககமும் எழுதுவர். தொடர்ந்து அவர் எழுதுவது தொல்காப்பிய ஐந்திர உறவைக் காட்டுவதாகும்.

''ஆசிரியர் (தொல்காப்பியர்) அவர் மதம் பற்றிக் கூறினார் ஆகலின் அதனொடு மாறு கொள்ளாது என்பது. இக்கருத்து விளக்கிய அன்றே பாயிரத்துள் 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' எனக் கூறிற்று என்க.''

இக்குறிப்பால், தொல்காப்பியம், ஐந்திரக் கோட் பாட்டினது என்பது தெளிவாகிறது. தொல்காப்பிய நூலையும் ஐந்திரத்தையும் சான்று கொண்டு இணைத்துக் காட்டிய ஒரே உரையாசிரியர் சேனாவரையரே.

# 3

# அயல்மொழிகளில் ஐந்திரத் தாக்கம்

இந்தியாவின் பழைய வரலாறு இரு கூறுகளை உடையது. ஒன்று; ஆரியர் வருகைக்கு முற்பட்ட நிலை; மற்றொன்று ஆரியர் வருகைக்குப் பிற்பட்ட நிலை. ஆரிய மொழியிலும் இந்த நிலைகளுள்ளன. வேத மொழி நிலை ஒன்று சமஸ்கிருதம் ஆன நிலை பிறிதொன்று. சமஸ் கிருதம் என்பதற்குச் செம்மைப்படுத்தப் பட்டது என்றே பொருள். வேதமொழியினின்று செம்மைப் படுத்தப் பட்டது என்று பொருள். வேத மொழி என்றால் என்ன? ரிக் முதலான வேதங்களை உச்சரிக்கப் பயன்படுத்தப்பட்ட **பேச்சு மொழி** என்பது கருத்து. வேதங்கள் எழுத்து மொழியில் இருந்தவை அல்ல. வேதத்தை 'எழுதாக் கிளவி' என்று குறித்ததும் இது பற்றித் தான். பேச்சு மொழியாக இருந்த ஆரியம் எப்போது எழுத்து மொழி ஆயிற்று? ஈரான், ஆசியா மைனரிலிருந்த ஆரியர் இந்தியா விற்கு வந்த பின்தான் அது எழுத்து மொழியாயிற்று. அப்போது இந்தியாவில் வழங்கிய தமிழ் அல்லது திராவிட மொழிகளைப் பார்த்து எழுத்தும், இலக்கணமும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆரிய மொழியில் உள்ள

சில ஒலி, எழுத்து, சொல்லமைப்புகள் அவை திராவிடத்தால் தாக்கம் பெற்றிருப்பதை உறுதி செய்கின்றன. சமற்கிருத இலக்கிய வரலாற்றை ஆராய்ந்து எழுதிய அறிஞர் டாக்டர். ஏ. பெரிடேல் கீத் இக் கருத்தை உடன் பட்டு எழுதுகிறார்.

The Langaage of the tribes whose priests cherished the hymns of Rigveda was subject doubtless to all the normal causes of speech change, accentuated in all liklihood by the gradual addition to the community of non–Aryan elements as the ealier inhabitants of the north, Munda or Dravidian tribes, fell under their control.

Common sense renders Dravidian and Munda influences inevitable, though proof may be difficult.

Dialeatic influence may be traced in the recognition of 'l' in many works in lien of r,and a cetain distinction between the dialect which underlies the Rigveda and that of Panini is revealed by the absolute ignoring by the latter of the substitution of 'l' and 'bh' for 'd' and 'dh' Otherwise the chief mark of progress is the growth of the tendency to cerebralization, possibly under Dravidian influence.[1]

ஆரியர் வருகைக்கு முன் இந்தியா முழுதும் பரவி இருந்தது தமிழ் அல்லது திராவிட மொழியே என்பது அறிஞர் பலர் ஒருமித்து உரைக்கும் கருத்து. 'பலுசிஸ்தானத்தில் வழங்கும் பிராகுவி என்ற திராவிட மொழியும், நேபாள எல்லையில் வழங்குவதாக அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட திராவிட மொழியும் பழங்காலத்துக்

1 Berriedale Keith. A. A History of Sanskrit Literature. Oxford University Press London. IV Edition. PP. 3,4,5,



கங்கை மண்டலம் முழுதும் திராவிட மொழி பேசும் பகுதியாக இருந்தன என்று சான்று பகருகின்றன. ஆரியர் தாக்குதலால் அழிந்து போனதாகக் கருதப்படும் சிந்து வெளிப் பகுதியில் வழங்கிய மொழி தமிழ் அல்லது திராவிடமே என்பது அண்மையில் மீண்டும் உறுதி செய்யப் பெற்றிருக்கிறது.[2] வேத மொழியில் இடம் பெற்றுள்ள திராவிடத் தமிழ்ச் சொற்களும் இதனை வலியுறுத்துகின்றன. இவையன்றி இந்தோ-ஈரோப்பிய மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படும் சமஸ்கிருதத்தில், பிற இந்தோ-ஈரோப்பிய மொழிகளில் இல்லாத எழுத்து வைப்பு முறை, எழுத்துகள், ஒலிப்புகள், சொற்கள், தொடர்கள் எவ்வாறு எதனால் இடம் பெற்றன? சான்றாக ஒன்றைப் பார்ப்போம்.

ஆங்கிலமும், சமஸ்கிருதமும் இந்தோ ஈரோப்பியக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள். இரண்டு மொழிகளிலும் அமைந்துள்ள எழுத்து வைப்பு முறை நோக்கத் தக்கது.

**ஆங்கில முறை :**

A B C D E F G H
I J K L M N O P
Q R S T U V W X
Y Z.

**தமிழ் முறை :**

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ
க ங ச ஞ ட ண
த ந ப ம ய ர
ல வ ழ ள ற ன

2 Mail, Jan. 1975, கல்கி, 26-1-1975.

**சமற்கிருத முறை**

அ ஆ இ ஈ உ ஊ ரு ரூ லு ர ஐ ஓ ஔ அம் அஹ.

| | | | | |
|---|---|---|---|---|
| க$^1$ | க$^2$ | க$^3$ | க$^4$ | ங |
| ச$^1$ | ச$^2$ | ச$^3$ | ச$^4$ | ஞ |
| ட$^1$ | ட$^2$ | ட$^3$ | ட$^4$ | ண |
| த$^1$ | த$^2$ | த$^3$ | த$^4$ | ந |
| ப$^1$ | ப$^2$ | ப$^3$ | ப$^4$ | ம |
| ய | ர | ல | வ | ச |
| ஷ | ஸ | ஹ | ள | க்ஷ |

இம்மூன்றி னிடையுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நுணுகி நோக்குக. ஆங்கிலத்தில் உயிர் முதல், மெய் பின் என்ற வைப்பு முறை இல்லை. ஆங்கிலத்தில் உள்ள a, e, i, o, u (Consonants) அங்கும் இங்குமாகக் கலந்து குழம்பி உள்ளன. சமற்கிருதத்திலும், தமிழிலும் உயிர் முதலிலும். வல்லின மெல்லின மெய்கள் அடுத்தும், இடையினம் அவற்றைத் தொடர்ந்தும் அமைந்துள்ளன. சமற்கிருதம், இந்தோ ஈரோப்பிய மொழி. ஆனால் எழுத்து வைப்பு முறை அங்குள்ளது போல இல்லை. ஏன்? அங்குள்ள எந்த மொழியிலும் இந்த வைப்பு முறை இல்லை. பின் எப்படி இந்த முறை சமற்கிருதத்திற்கு ஏறியது? விடை தேடி அலைய வேண்டியதில்லை. இந்தியாவிற்கு வருகை தந்த ஆரியர், இங்குக் கங்கைக் கரையில் அன்று இருந்த தமிழர் அமைத்த எழுத்திலக்கணத்தைப் பார்த்து அமைத்துக் கொண்டனர். அதனால் வந்த ஒற்றுமையே என்பதில் ஐயமில்லை.

தமிழைப் போல சமற்கிருத்திலும் வேற்றுமை எட்டு என்பதும் இதே போன்றதுதான். தமிழிலுள்ள மூன்றாம் வேற்றுமைக்குக் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்பனவே



பொருள்கள். இவற்றைப் போல, சமற்கிருதத்திலும் மூன்றாம் வேற்றுமை அமைந்துள்ளது. இது போலத் தொல்காப்பிய இலக்கணத்திற்கும், சமற்கிருத இலக்கண நூல்களுக்கும் இடையே காட்டப்படும், டாக்டர். பர்னல் காட்டும் ஒற்றுமைகள் அனைத்தும், தமிழைப் பார்த்துச் சமற்கிருதத்தை—இலக்கணத்தை அமைத்ததால் நேர்ந்த ஒற்றுமைகளே! தொல்காப்பிய இலக்கணம் அன்றைய வட தமிழ் நாட்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்றும் ஓர் ஐயம் தோன்றுகின்றது. பாலைவனத்தில் மட்டுமே வாழ்கின்ற ஒட்டகத்தை அவர் இரண்டிடங்களில், தமிழர்—தமிழர் மரபியலில் கூறியிருப்பது சிந்தனைக் குரியது. ஒட்டகம் வாழும் நிலையான பாலை நிலம் தமிழகத்தில் இல்லை; வட இந்தியாவிலேயே உள்ளது. வடபுல நில இயல் அறிந்த தொல்காப்பியர்—மரபியலில் ஒட்டகத்தை உரைத் தாரோ என்று எண்ண வேண்டியுள்ளது. அன்றியும் இயற் சொல், திரி சொல், திசைச்சொல் என்று வகுத்தவர், வட சொல் என்ற ஒன்றைத் தனியே காட்டுவது கருதத்தக்கது. வட சொல்லைத் திசைச் சொல்லில் அடக்காமற் போன தேன்? உரையாசிரியர் இதற்குக் காட்டும் காரணம் ஒரு பக்கம் இருக்க, இந்தியாவிற்கு வடக்கே இருந்து வந்த வட ஆரியர் தம் சொல் என்று கருதினவ ராதல் கூடும்.

சமற்கிருதத்தில் இலக்கணத் தோற்றத்திற்குக் காரணம்—இங்கு வழங்கிய இலக்கணச் செப்பம் வாய்ந்த மொழிகள் மட்டும் அல்ல. இங்கிருந்த சைன, பௌத்த சமயத்தைச் சார்ந்த மக்கள் தம் மொழியில் இலக்கண, இலக்கியங்களைப் பெருக்கிக் கொண்டமையைக் கண்ட ஆரியர், அவற்றிற்குப் போட்டியாகத் தம் இலக்கணப் படைப்புகளைச் செய்தனர். டாக்டர். பெரிடேல் கீத், கூறுவது வருமாறு: We must not, however, exaggerate the activity of the grammarians to the extent of suggesting

with some writers that Classical Sanskrit is an artificial Creation, a product of the Brahmins when they sought to counteract the Buddhist creation of an artistic literature in Pali by recasting their own Prakritic speech with the aid of the Vedic language.[3]

What is clear is that Sanskrit represents the language of Brahmanical civilization, and the extent of that civilization was ever increasing, though the Brahmanical religion had to face *Competition* from new faiths, in special[4] Buddhism and Jainism, from the fifth century B. C.

டாக்டர் பர்ணலுக்கும் இக்கருத்து உடன்பாடு என்பது அவர் கருத்தால் தெளிவாகிறது. "The influence of Buddhism on grammatical studies has been lately pointed out by Mr. Sayee; (Principles of Comparative Philology P. 246) he says: "it is very possible that the Snt. grammarans were excited to their work by the native dialects, which had been quickened into activity and raised to the level of respectability by the spread of Buddhism'' This ramark is, I believe new but it is perfectly just.[5]

பிற்கால அறிஞர், இவ்வடிப்படை வரலாற்றை மறந்து, தமிழிற்கும் சமற்கிருத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமைகளைக் கண்ட உடனேயே, அவையெல்லாம் சமற்கிருதத்திலிருந்து தமிழிற்குக் கடன் கொள்ளப்பட்டன என்று எழுதி விடுகின்றனர். ஐந்திரம் பற்றி ஆராய்ந்த டாக்டர் பர்ணலும் இவ்வகையினரே. 'ஐந்திரம் தமிழகத்தைச்

---

3, 4 Berriedale Keith, A History of Sanskrit literature. Under the heading The origin of Sanskrit. P. 7, 8.

5. Dr, Burnell. P. 38, 39.



சார்ந்தது, ஆரிய தேசத்தது அன்று' என்ற தாரநாதர்தம் குறிப்பு (இந்நூல் பக்கம் 30) ஆழ்ந்த ஆய்விற் குரியது.

**ஐந்திரத்தின் தாக்கம் :** ஐந்திர இலக்கணத்தின் தாக்கம் இந்தியத் துணைக் கண்டத்தில் எழுந்த பல இலக்கணங்களிலும் பதிந்திருக்கிறது. தமிழ் சமற்கிருதம், கன்னடம், திபெத்தியம், பாலி, சிங்களம், பர்மியம் ஆகிய ஏழு மொழி இலக்கண நூல்களிலும் ஐந்திரத் தாக்கத்தின் சுவடுகள் அழியாமல் உள்ளன.

## 1. தமிழ் இலக்கணங்கள்

தமிழில் தொல்காப்பியம், நன்னூல், ஆகியன இத் தாக்கம் பெற்றவை. தொல்காப்பியம் எவ்வெவ்வாறு தாக்கம் பெற்றது என்பது முன்னே விளக்கப் பட்டது. நன்னூல் ஐந்திரத்தின் நேர்முகத் தாக்குதலைப் பெற வில்லை. எனினும் ஐந்திரத் தாக்கத்தால் உருவான காதந்திரத்தின் செல்வாக்கு நன்னூலில் காணப்படுகிறது எனலாம். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு தொடங்கி தமிழகம் சோழர்தம் பேராட்சிக்கு உள்ளாகியது. அக் காலத்தில், ஈழத்துடன் பல முறை போர் நடந்தது. ஈழம், பல காலம் தமிழ் மன்னர்தம் ஆட்சி நீழலில் விளங்கியது. அப்போது ஈழத்தில் காதந்திரம் மிகச் செல்வாக்குப் பெற்ற நூலாக இலங்கியது. சிங்களத் தமிழக இலக்கியப் பண்பாட்டுப் பரிமாற்றம் தவிர்க்க முடியாதது. ஆதலால், இக் காதந்திரம் தமிழகத்திலும் பரவி இருத்தல் வேண்டும். கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் சோழர்தம் காலத்தில் எழுதப் பட்ட நன்னூல், சிங்கள வழி காதந்திரத் தாக்கம் பெற்றிருத்தல் கூடும். 'எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம்' என்பது தொல்காப்பியத்தில் இல்லாதது. பவணந்தி தரும் விளக்கம். இது 'அர்த்த

பதம்' என்ற ஐந்திரச் சூத்திரத்தின் தாக்கம் என்பது வெளிப்படை.

**2. சமற்கிருத இலக்கணங்கள் :**

சமற்கிருத இலக்கண வரலாறு மூன்று கட்டங்களை உடையது. 1. பழைய இயற்கை (ஐந்திரமுறை) முறை (The primitive natural (Aindra) system.)

2. பாணினியின் செயற்கை முறை (Panini's artificial system)

3. பாணினியைத் தழுவிய முறை (Modern adaptations of Panini's system made in historic times)

இம்மூன்றனுள் இப்போது வழங்குவனவற்றுள் பெரும்பாலன, பாணினியத் தாக்கம் பெற்றவை. இருப்பினும் பாணினியம் உட்பட, சில நூல்கள் ஐந்திரத் தாக்கம் பெற்றன என்பது டாக்டர் பர்ணலின் அழுத்தமான கருத்து.

**பாணினி :** பாணினியம், சமற்கிருதத்தில் தோன்றிய முதல் நூல் அன்று. அதற்கு முன் ஐந்திரம் முதலான பல இலக்கண நூல்கள் இருந்துள்ளன. வேத காலத்தில் வியாகரணம் இந்திரனாலும், சப்த பாராயணம் என்ற நூல் பிரகற்பதியாலும் செய்யப்பெற்றன. வேதப் பிராமணங்களில், வர்ணம், வருஷன், வசனம், விபக்தி முதலான இலக்கணக் குறியீடுகள் காணப்படுகின்றன. யாஸ்கரின் நிருத்தத்திற்கு முன்பே சொல்லாராய்ச்சி இருந்தது என்பதும், இருவகைக் கொள்கைகள் வழங்கின என்பதும், அவற்றுள் ஒன்றையே யாஸ்கர் தழுவினார் என்பதும் அவர் நூலால் விளங்குகின்றன. பாணினிக்கு முன்பே சொற்கள் நாம, ஆக்யாதம், உபசர்க்கம், நிபாதம் எனப் பகுக்கப்



பெற்றிருந்தன. சௌனகப் பிராதிசாக்கியம் இதனைக் காட்டுகிறது. பாணினியின் இலக்கணம் ஒன்பதாவது என்ற வழக்கு வழங்குகிறது. ஆபிசலி, காசக்ருத்சனம் என்ற இரண்டு இலக்கண நூல்கள் மகாபாஷ்யத்தில் குறிக்கப்படுகின்றன. சாகடாயனர் சிறந்த இலக்கணியாக நிருக்தத்தில் குறிக்கப்படுகிறார். இவரைப் பாணினியும் குறிப்பிடுகிறார். ஆதலால் பாணினிக்கு முன்பே இவர் இருந்தனராதல் வேண்டும். பாணினிக்கு முன் பல இலக்கணிகள் இருந்தனர் என்பது முன்பும் விளக்கப்பட்டது. (இந்நூல்பக்கம் 25, 26) ஆக, பாணினி அவர்க்கு முன்பு வழங்கிய பல இலக்கணக் கருத்துகளின் தொகுப்பாளர் என்றும் ஓரளவு கூறலாம்.

What is clear from Panini's own works is that he summarizes the efforts of many previous writers's from whom we may be sure he borrowed his form as well as many facts[6]

என்று டாக்டர் பெறிடேல் கீத் இதனை வற்புறுத்தும்.

**பாணினியமும் ஐந்திரமும் :** பாணினி, தனக்கு முன்பிருந்த நூல்களிலிருந்து பலவற்றைப் பெற்றார். அவர் ஐந்திரத்தினின்றும் பெற்றன பல.

1. பிரதமா, த்வீதீயா, திரிதீயா சதுர்யா, பஞ்சமி, சஷ்டி, சப்தமி. இவை வேற்றுமைப் பெயர்கள். வேற்றுமைகட்கு அவர் கூறும் விளக்கமும் காட்டும் பெயர்களும் பொருந்தி வர வில்லை. இதனின்று, தனக்கு உடம்பாடு இல்லை எனினும், தனக்கு முன்பு வழங்கி ஊறிப் போன

6 Berriedele keith. P. 423.

பெயர் வழக்குகளை அகற்ற மனமில்லாமல் அவர் ஆளு கிறார் எனத் தெரிகிறது.

2. பாணினி ஆளும் ஐந்திரக் கலைச் சொற்கள் சில. அவை : அநுஸ்வர, அந்த, ஏகவசனம் த்விவசனம், பகு வசனம், உபசர்க்கம், நிபாதம், தாது, பிரத்யய, பிரதான, பிரயத்ன, பவிஸ்யத் (காலம்), வர்த்தமான(காலம்) சமாசம். இவற்றிற்கு வரையறை கூறாமல் அப்படியே ஆளுகிறார்.

3. வரையறை கூறி பாணினி பயன்படுத்தும், ஐந்திரக் கலைச் சொற்கள் அநுநாசிக, ஆத்மநேபதம் ஆமந்திரீதம், உபாதம், குணம், தீர்க்கம், பதம், பரஸ்மை பதம், விபக்தி, விருத்தி, சம்யோகம், சவர்ணம், ஹ்ர்ஸ்வம்

## வேதங்களில் ஐந்திரம்

தைத்திரேய ஆரண்யத்திற்கு எழுதப்பட்ட முதல் உப நிடதம் தைத்திரேயம். அதன்கண் ஐந்திரச் சொற்கள் ஆளப் பெற்றுள. அவை : வர்ணம், ஸ்வரம், மாத்திரை என்பவை.

சாந்தோக்கிய உபநிடதம், ஸ்பர்சம், ஸ்வரம், ஊஷ்மன் என்ற ஐந்திரச் சொற்களைப் பயன்படுத்துகிறது.

சதபத பிராமணத்தில், ஏகவசனம், பகுவசனம் என்ற ஐந்திரச் சொற்கள் ஆளப்பட்டுள்ளன.

ஐத்ரேய பிராமணத்தில், அட்சரம், அட்சரப்பங்க்தி சதுரட்சரம், வர்ணம், காரம், பதம்

கோபத பிராமணத்தில், சாம வேதத்தில், காரம், பதம் முதலான பல சொற்கள்

பேராசிரியர் வெப்பர், பின் வரும் ஐந்திரச் சொற்கள் வேதத்தில் இடம் பெற்றுள்ளன என்பர். வியஞ்சனம்,



ஓகாரம், மகாரம், தாலுஸ்தானம், ஓஸ்திய ஸ்தானம், புலுதம், திரிமாத்திரை, சந்தயட்சரம், பிரக்ரியா, நாமம் என்பன.

**சிட்சைகளில் ஐந்திரம் :** அமோக நந்தினி சிட்சை, கேசவ சிட்சை, சிட்சாதிசதுஷ்டயா. சர்வ சம்பத சிட்சை என்ற சிட்சைகள் ஐந்திரத் தாக்கம் பெற்றவை என்பது பர்ணல் கருத்து.

## பிராதிசாக்கியங்களில் ஐந்திரம்

சிட்சையில், வர்ணம், ஸ்வரம், மாத்திரம், ப்ரயத்னம், மத்திய விருத்தி, சம்கிதை ஆகியன கூறப் பெறும். இவற்றை விரிவாகக் கூறும் நூல்கள் வேதத்தில் ஒவ்வொரு சாகைக்கும் தனித் தனியே இருக்கின்றன. அவை பிராதி சாக்கியம் எனப்பெறும். ரிக்வேதப் பிராதி சாக்கியம், தைத்திரீயப் பிராதி சாக்கியம், காத்தியாயனின் பிராதி சாக்கியம், அதர்வ வேதத்திற்குரிய பிராதிசாக்கியம், என்ப வற்றில் ஐந்திரத்தின் சுவடுகள் உள்ளன. மொழிக் குரிய ஒலியை அணுகு முறையும், சொல்வரலாற்று ஆராயச்சி நிகழ்த்தும் முறையும் ஐந்திரத் தாக்கத்தால் பெற்றவை யாம். அவை யனைத்தையும் இன்று பிரித்து அறிய இயல வில்லை. எனினும் சொல்லாராய்ச்சி வகையில் தலைமை வாய்ந்த யாஷ்க நிருக்தம் குறிப்பிடத் தகுந்தது. காத்யாயனரின் ப்ராஜ சுலோகங்களும், வியாலியின் சங்கர்காவும் ஐந்திரக் கோட்பாட்டின. சந்தனவரின் பித்சூத்திரங்களும், தென்னிந்தியாவைச் சார்ந்த ஜடா படலமும் இக்கோட்பாட்டினவே.

**காதந்திரம் :** சர்வ வர்மனால் எழுதப்பட்ட இவ் விலக்கண நூல் புகழ் பெற்ற ஒன்று. சைனரால் எழுதப் பெற்ற இந்நூல் கி.பி. 1872 இல் தென்கன்னட மாநிலத்தில்

கண்டறியப்பட்டது. துர்க்க சிம்மனால் (கி. பி. 8 ஆம் நூற்றாண்டு) உரை[7] எழுதபட்ட இந்நூல் ஐந்திரத் தாக்கம் பெற்றது என்பது பர்ணல் கருத்து. வோபதேவரின் 'முக்த போதம்', சரஸ்வத வியாகரணம் ஆகியனவும் ஐந்திரக் கலைச் சொற்களைக் கையாளும் நூல்களில் குறிப்பிடத் தக்கவை.

## கன்னட இலக்கணங்களில் ஐந்திரம்

ஐந்திரத்திற்கும் அவைதிகத்திற்கும் இடையேயுள்ள எதிர்ச்சுழல் முன்பே சுட்டப்பட்டது. ஐந்திரமும், அதன் தாக்கம் பெற்ற நூல்களுள் பெரும்பாலனவும் சைன சமயச் சார்பின என்பது சுட்டத் தக்கது. தமிழில் நன்னூல் தலைமை வாய்ந்த சான்று. காதந்திரமும் இவ்வகையினதே. இவை யன்றிச் சைனத்தின் மைய நிலமாக இலங்கும் கருநாடக மண்ணிலும், கன்னட மொழியில் ஐந்திரச் சார்பு இலக்கண நூல்கள் எழுதப் பெற்றன. அவற்றுள் கேசிராசனால் எழுதப்பெற்ற 'சப்த மணிதர்ப்பணம்' குறிப்பிடத்தக்கது. இந்நூலின் அமைப்பும், ஆளப்பட்டிருக்கும் கலைச் சொற்களும் அப்படியே ஐந்திர முறையைச் சேர்ந்தவை. கி. பி. 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்நூலிலுள்ள எழுத்துகளின் முறைவைப்பு, பெயர், வினை, வேற்றுமை (7+1) முதலாயின ஐந்திரக் கோட்பாட்டினவராக உள்ளன. பெயர் தெரியா ஆசிரியர் ஒருவரால் எழுதப்பெற்ற சப்த அநுசானம் என்ற நூலும், பத்தாகளங்கர் என்ற சைனரால் எழுதப்பெற்ற 'பாஷா

---

7. Durgasimha explains in his notes on 11-16-19 the shape of the letters devoting visarjaniiya (like a little girl's breast), jiihvaamuuliiya (like a thunderbolt) Upadhmaniiya (like an elephant's head) and anusvaara (a drop.)



மஞ்சரி' என்ற நூலும் ஐந்திரச் சார்புடையன என்பர் பர்ணலும், கிட்டலும். சப்தமணி தர்ப்பணத்தில் வரும் **'குண வசனம்'** என்பது தமிழில் உள்ள 'உரிச்சொல்' என்பதன் எதிரொலி.

## திபெத்தில் ஐந்திரம்

திபெத்திய மொழியின் இலக்கண வரலாறு கி. பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் தொடங்குகிறது. பண்டித சம்போதர் என்பவரே முதல் இலக்கணி. இவர் எழுதிய இலக்கணத்தின் பெயர் ; சம்–சு—பா என்பதாம். முப்பது எழுத்துகள் என்று அதற்குப் பெயர். கிடைத்திருக்கும் சிலவற்றுள் ஐந்திரச் செல்வாக்கு ஏற்பட்டிருக்கின்றது. இவை ஐந்திரச் சார்புடைய சமற்கிருத நூல்களான, 'கலாப சூத்திரம், கலாப சூத்திர விருத்தி, கலாப லகு விருத்தி, கலாப தாது சூத்திரம் என்பன திபெத்திய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையும் இங்கு எண்ணத்தக்கது. திபெத்திய மொழியில் தமிழைப் போலவே எட்டு வேற்றுமையும், நான்கு சொற்பாகுபாடுகளும் இருப்பது கருதத்தக்கது. (Dr. Burnell. P. 64)

## பாலியில் ஐந்திரம்

திராவிட மொழிகளில் பிற மொழிக்கூறு என்ற தலைப்பிட்ட ஆராய்ச்சியில் சமற்கிருதம் அறிவு எத்துணை முதன்மையோ அத்துணை முதன்மை வாய்ந்தது பாலி மொழி அறிவு. பாலியில் ஐந்திரச் சார்பிலக்கணங்கள் கச்சாயனம், (கி. பி 4 நூற். முன்னையது) மகாசத்தம், ரூபசித்தி, பாலாவதாரம், யோக சித்தி (கி. பி. 14 நூற்.) ஆக்யாபதம், தாதுமஞ்சூசாம், மொகலானர் எழுதிய வியாகரணம் (கி. பி. 1153-1186) என்பன. இவற்றுள் கச்சாயனமே தலைமை வாய்ந்தது. ஏனையவை அதன்

வழி விளைந்தவை. கச்சாயனத்தை கோப்பன்கேகன் நூலகத்தில் கண்டெடுத்து முதலில் கி. பி. 1863இல் பதிப்பித்தவர் தி' ஆல்விஸ் என்பாராவர்.

**சிங்களத்தில் ஐந்திரம்**

கச்சாயனத்தைப் பதிப்பித்த தி'ஆல்விஸ் (D 'Alwis) சிங்கள இலக்கணமும், பாலி மொழியைத் தழுவி எழுதப் பட்டதாகும் என்று குறித்துள்ளார். காரணம் பாலி மொழி, பௌத்த மத நூல்களின் மூல மொழியாக இருப்பதே காரணம். இதனால், சிங்களர் கச்சாயனத்தின் செல்வாக்குப் பெற்றனர். பெற்றுச் 'சிதத் சங்கராவ' (Sidat-Sangarava கி. பி. 1260) என்ற நூலை எழுதினர். இதுவும் தி'ஆல்விஸ் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றுக் கி பி. 1853 இல் கொழும்பு விலிருந்து வெளிவந்தது. கச்சாயனத்தைப் பின்பற்றியது எனவே இதன் ஐந்திரச் சார்பை விண்டுரைக்க வேண்டா.

**பர்மிய மொழியில் ஐந்திரம் :**

பர்மிய மொழி இலக்கணம், பாலி மொழியைச் சார்ந்தது. அறிஞர் பிகான்டெட் (Bigandet) இதனைத் தெளிவாக்கியுள்ளார். ஈதன்றி சியாம், ஜாவா, கம்போடிய நாட்டு மொழிகளிலும் பாலி மொழி வழி ஐந்திரக் குறியீடுகள் பரவியுள்ளன. அங்கெல்லாம் பௌத்த மதமே செல்வாக்குடையது ஆதலால், பாலி மொழி வழி ஐந்திரக் கூறுகள் பரவின போலும்.

4

# ஐந்திரம் பற்றி ஒரு பார்வை

எங்கு எப்படி இருந்தாலும் சரி! இங்கு நாடும், ஏடும் பிரிக்க முடியாதபடி அரவணைத்துக் கிடக்கின்றன. தமிழ் நாட்டு வரலாற்றை, இலக்கிய ஏட்டு வரலாறும், இலக்கிய ஏட்டு வரலாற்றைத் தமிழ் நாட்டு வரலாறும் தெளிவு படுத்துகின்றன. தமிழகப் பண்பாட்டுத் தொன்மையை வரையறுக்கும் கலைக்களஞ்சியம் தொல்காப்பியம். இத்தலை நூலுக்கு, மூலநூலைச் சமற்கிருதத்தில் தேடுகின்றனர் சில அறிஞர். அவருக்கு 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற பாயிரத் தொடர் அவலாகக் கிடைத்தது. இத் தொடரை வைத்துக் கொண்டு, சமற்கிருத ஐந்திரம் எழுந்த பின்புதான் (கி.பி. நான்காம் நூற்றாண்டு) தொல்காப்பியம் எழுந்திருக்க வேண்டும் என்று சாதிக்கின்றனர் இச் சாதிப்பை முறியடிக்கிறது இக்கட்டுரை*

''மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப்பியன்''

என்பது தொல்காப்பியப் பாயிரத்துள் வருந் தொடர். இது பனம்பாரனரால் இயற்றப்பெற்றது. பாயிரம் எப்பொழுது

---

* ஐந்திரம் பற்றி நான் எழுதிய இக் கட்டுரை முன்னர் தென்மொழியிலும் அண்மையில், முக்குடை (ஆனி. 74) இதழிலும் வெளி வந்தது.

இயற்றப்பட்டது என்ற செய்திக்குச் செல்லாமல், இப்பாயிரங் கொண்டு, தொல்காப்பியர் காலத்தைவரையறுப்பதற்கு உடன்பட்டு எழுந்ததே இக்கட்டுரை.

'ஐந்திரம்' என்ற சொற்றொடர் எதனைக் குறித்தது என்பதை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கம். இதுவரை 'ஐந்திரம்' என்பதைப் பேராசிரியர் பலரும் ஒரு நூல் எனவே கொண்டுள்ளனர். ஐந்திரம் பற்றிய கால வேறுபாடு பற்றிய கருத்து வேறுபாடு உண்டே ஒழிய அது 'நூல்' (வியாகரணம்) என்பதில் கருத்து வேற்றுமை எழவில்லை. பிறிதொரு சாரார் 'ஐந்திரம்' எனப்பாடம் ஓதி, எழுத்து, சொல், பொருள் யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களைக் குறித்தது என்பர்[1] இத்தகு பகுப்புமுறை பிற்காலத்தது. தொல்காப்பியர் காலத்து இருந்தது என்பதற்கான வலிவான சான்றுகள் இல்லாமையால் இக்கருத்தை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. பாயிரத்தில், 'எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' எனத் தெளிவாக மூன்று பகுப்பு முறைகள் கூறப்படுகின்றன. ஐந்திலக்கணங்களைத் தொல்காப்பியர் கூறியுள்ளார் என்றாற் கூட 'ஐந்திறம்' எனக் குறிக்கும் வழக்கம் இல்லை. அவ்வாறு பிற்கால இலக்கண ஆசிரியர்கள் யாரும் வழங்கவும் இல்லை.

ஓர் இலக்கண ஆசிரியன், தமிழ்மொழிக்கு இலக்கணம் செய்யும் பொழுது, அவ்வாசிரியனுக்கு வேறொரு மொழி நூல், முதலாக இருக்க முடியாது என்ற பொதுவான கருத்தை எண்ணிச் சிலர், இந்திரன், வடமொழி இந்திரன் அல்லன், தமிழ் மண்ணிலே வாழ்ந்த தமிழன்தான் இந்திரன் எனக் கொண்டனர். இன் + திறன் = இந்திரன் ஆயிற்று

1. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்—பண்டித அ. கி. நாயுடு, ப. 11.



என்பது அவர்தம் கொள்கை.[1] ஒப்புநோக்குக உடன் + பாடு = உடம்பாடு (குறள் 893). பாயிரத்தை, ஒரு முறைக்குப் பன்முறை நுணுகி ஓதும் பொழுது, சில புது எண்ணங்கள் ஏற்படுகின்றன. ஒன்றையே கேட்டுக் கேட்டு, படித்துப் படித்து வருகின்ற நமக்குச் சில தவறான மரபு வழி எண்ணங்கள் உள்ளத்தில் ஊறி விடுகின்றன. இந்த மரபு வழி உணர்வுகள் நம்மைப் புதிய நெறியில் எண்ண விடுவதில்லை. அப்படிப் பிறரால் எண்ணிச் சொல்லப்பட்டாலும் இந்த மரபு வழி உணர்வு, அந்தப் புதிய கருத்தை மனம் ஏற்காதவாறு தடுத்து விடுகிறது. இந்த நிலையினின்று நாம் விடுபெற வேண்டும்.

'ஐந்திரம்' என்ற தொடர் ஐந்திர 'வியாகரணத்'தைக் குறிக்கவில்லை. அதற்கான காரணங்கள் :

1. இந்திரனாற் செய்யப்பட்ட நூல், அவனது பெயராலேயே 'இந்திரம்' என வழங்கவேண்டுமே ஒழிய 'ஐந்திரம்' என வழங்குவது பொருந்துமாறில்லை. 'இ' என்ற உயிருக்கு ஈ, எ, ஏ, என்பனவே இன எழுத்துகள். "ஐ" என்பது இன எழுத்தன்று. மேலும் நேமிநாதன்—நேமிநாதம், செயிற்றினர்—செயிற்றியம் என்ற வழக்குகளையும் பார்க்க.

2. பாயிரத்தின் தொடக்கப் பகுதியில் 'முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி'—என முந்து நூல் என்று தொல்காப்பியர் அறிந்த நூலைச் சுட்டிக் காட்டிவிட்டார். பின்னரும், வேறொரு நூலான ஐந்திரத்தைச் சுட்ட

1. மன்—திரம்: மந்திரம் எனக் காட்டுவர் பாவாணர், பார்க்க; ஒப்பியன் மொழி நூல் ப. 141.

வேண்டியதில்லை. அவ்வாறு கொள்ளின் 'கூறியது கூறல்' என்ற குற்றத்தின் பாற்படும்.

3. தொல்காப்பியத்தில் ஆங்காங்கே ஏறத்தாழ 287க்கும் மேற்பட்ட இடங்களில் "என்ப, என்மனார்" போன்ற சொற்றொடர்களைப் பார்க்கிறோம். தமக்கு முன்புள்ள இலக்கண ஆசிரியர்கள் "சொன்னார்கள்" எனப் பன்மையிலேயே எங்கும் சுட்டிச் சொல்கிறார். எந்த ஒரு தனியாசிரியனும், சொன்னதாகவோ தாம் பின் பற்றியதாகவோ— எங்கும் அவர் சுட்டவில்லை. அப்படி இருக்கும்பொழுது, அவர் "ஐந்திரம்" என்ற ஒரு நூலை மட்டும் கற்றிருந்தார், பின்பற்றினார் என்பது போலப் பொருள் கொள்ளுவது பொருந்தவில்லை. (ஐந்திரத்தைப் பின்பற்றினார் என்பது போல, சேனாவரையர் உரைசெய்வர். சொல், வேற்றுமை—74). பாயிரத்தில்,

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத், தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல், கண்டு"

என்று வருகின்றது தமிழ்நாட்டில், தமிழக எல்லையில், தமிழ் மண்ணில் கிளைத்த வழக்கையும் செய்யுளையும், கொண்டு. எழுத்து சொல், பொருள் நாடிச் செந்தமிழினது இயல்பு பொருந்தின செந்தமிழ்நிலத்தொடு முந்துநூல் கண்டார்.ஒரு மொழியின் இலக்கணம் கூறப்போகும் ஆசிரியன் அம்மொழி வழங்கும் எல்லை, அம்மொழியின் வழக்கு, செய்யுள், முந்து நூல் இவற்றையே கற்றிருக்க வேண்டும்-கற்றிருந்தார் தொல்காப்பியர் என்பது பாயிரக் கருத்து. 'தமிழ் கூறும் நல்லுலகத்து இலக்கணம் கூறப் புகுந்த ஆசிரியர், 'சமற்கிருதம் கூறும் நல்லுலகத்து இலக்கணத்தைக் கற்றிருந்தார்' என்பது அறிவுக்குப் பொருத்தமாக இல்லை.



ஐந்திர வியாகரணம் எக்காலத்தும் இல்லை. இந்திரன் இலக்கணம் செய்ததற்கும் முறையான சான்றுகள் இல்லை.[1]

6. தமிழ் இலக்கண நூற்கட்கு -ஐந்திரம் வழிகாட்டியாக இருந்தது என்பது பிற்கால இலக்கண ஆசிரியர்களால்[2] போற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

7. 'ஐந்திரம்' நூல் ஆயின் 'நிறைந்த' என்ற பெயரெச்சம் பொருத்தந்தானா? படித்தல், கற்றல், ஓதல், அறிதல், தொடுதல், உணர்தல் போன்ற வினைகளைச் சொல்லியிருத்தல் வேண்டும்.

நூல் கற்றல், படித்தல்......முறையான, தெளிவான தொடர். 'தண்டி கற்றவன்' என்று சொல்வோமே ஒழிய 'தண்டி நிறைந்தவன்' என்று சொல்வோமோ?

நிறை—என்ற சொல் அழிவின்மை, ஆடுஉக் குணம் நான்கில் காப்பன காத்துக் கடிவன கடியும் திண்மை, இடை, உறுதிப்பாடு, கற்பு, துலாம், நேர்மை, நிறுத்தல் அளவு, நிறையென்னேவல், நிறைவு, நீர்ச்சால், நூறுபலம், மாட்சிமை, வரையறை (கழகத் தமிழ் அகர வரிசை—ப 558) எனும் பொருள்களை உணர்த்தும். 'கற்றல்' என்ற பொருள், நிறை என்ற சொல்லிற்கு இன்மை அறிக. அன்றியும் தொல்காப்பியத்தில் யாண்டும் கற்றல் என்ற பொருளில் 'நிறை' என்ற சொல் ஆளப்படாமையும் இக்கருத்தை வலியுறுத்தும்.

---

1. தமிழ்ச் சுடர்மணிகள், பேரா. வையாபுரிப் பிள்ளை தொல்காப்பியம் 'காலம்'.

2. இலக்கிய உரையாளரான அடியார்க்கு நல்லாரை ஈண்டுக் கருதுவது சரியன்று.

நிறை—நுற்பா 735, 757, 887, 888, 894, 900, 937, 1004, 1025, 1092, 1258, 1434.
நிறைக்கும் — 41.
நிறைந்த — 1057
நிறைந்து — 838
நிறைய — 166, 1284
நிறையவும் — 1327
நிறையும் — 164, 167, 319, 389, 436, 474, 477, 601, 1098
நிறையே — 1219
நிறைக — 42, 815
நிறைவும் — 44
நிறையிற்கும் — 170

மேற்காட்டப்பட்ட 32 இடங்களிலும் நிறைந்த என்பதற்குக் 'கற்ற' 'உணர்ந்த' என்ற பொருள் இல்லை.

8. தொல்காப்பியர்க்கு முதலாசிரியன் அகத்தியன் என்பது பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரங்களால் விளக்க மாகிறது. 'முந்துநூல்' என வரும் பாயிரத் தொடர் ஒரு நூலையே குறித்தது என்பது சிவஞான சுவாமிகளின் தொல்காப்பியச் சூத்திர விருத்தி யால் அறியப்படும் செய்தி. அன்றியும் அவர் ஐந்திரம் தொல்காப்பிய முதனூலாகாது என்பதனையும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

'நூல் எனப் பொதுப்படக் கூறாது நிலத்தொடு முந்து நூல்' எனச் சிறப்பித்தலான் 'செந்தமிழ் நிலத்து மொழி தோன்றும் காலத்து உடன் தோன்றிய நூல் அகத்தியம் ஒன்றே ஆதலானும்,ஏனைய நூல்கள் எல்லாம் அகத்தியத் தின் வழித்தோன்றியனவேயாம் ஆதலானும், ஐந்திரம்



நோக்கித் தொகுத்தான் எனின் தமிழ் மொழிப் புணர்ச்சிக் கட் படும் செய்கைகளும் குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை, முதலிய சில சொல் இலக்கணங்களும், உயர்திணை, அஃறிணை முதலிய சொற் பாகுபாடுகளும் அகம் புறம் என்னும் பொருட் பாகுபாடுகளும், குறிஞ்சி, வெட்சி, முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதி களும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும், இன்னோ ரன்ன பிறவும், வடமொழியிற் பெறப்படாமையானும், இவையெல்லாம் தாமே படைத்துக்கொண்டு செய்தார் எனின் முந்து நூல் அகத்தியம் என்பதூஉம் அதன் வழித் தாகிய தொல்காப்பியம் அதன் வழி நூல் என்பதூஉம் துணியப்படும் என்க.[1] சிறந்த உரையாசிரியராகிய பேரா சிரியரும் அகத்தியரே முதல் நூலார் என்பர்.[2]

9. அகத்தியரை உரையாசிரியர்கள் சுட்டிக் காட்டி உள்ளனர். பிற்காலத்து இலக்கண ஆசிரியர்களும் சொல்லிச் செல்கின்றனர். (புறப் பொருள் வெண்பாமாலை; பன்னிரு படலம்) அகத்தியத் தொடர்பான பழஞ் செய்தி களும், கதைகளும் கூடத் தமிழில் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியரால், வெளிப்படையாக சுட்டிக் காட்டப்படாத அகத்தியர் பற்றிய செய்திகள் உண்டாகியுள்ளன.

தொல்காப்பியப் பாயிரத்தில் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டப்படுவதாகச் சொல்லப்படும் ''ஐந்திரம்—பற்றி, விரிவான செய்திகள் போற்றப்படாமல் போனதற்குக் காரணம் என்ன? 'ஐந்திரம்' என்ற தொடர் ஒரு நூலைக் குறித்த தொடராக அவர்கள் கொள்ளாததுதான் காரணமா?

---

1. தொல்காப்பியச் சூத்திர விருத்தி—கழகப் பதிப்பு ப-7.
2. பேரா. உரை, மரபு. 649.

ஏனைய இலக்கணப் பாயிரங்களில் இரண்டு முறை நூலாசிரியனின் முதனூற் கல்வி சுட்டப்படுகிறதா என்று ஆராய்ந்ததில்

(1) நன்னூல்
(2) நேமிநாதம்
(3) யாப்பருங்கலம்
(4) யாப்பருங்கலக் காரிகை
(5) தண்டியலங்காரம்
(6) நம்பியகப் பொருள்
(7) புறப்பொருள் வெண்பா மாலை

இவற்றுள், நூலாசிரியனைப் பற்றிய பாயிரங்கள் நேமிநாதம், தண்டி, யாப்பருங்கலக் காரிகை ஆகியவற்றுள் இல்லை.

''முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரின்
வகுத்தனன்
பொன்மதில் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி

என்று நன்னூற் பாயிரமும்,

''பாற்படு தென்தமிழ்ப் பரவையின் வாங்கி
யாப்பருங் கலநனி யாப்புற வகுத்தோன்;

என யாப்பருங்கலப் பாயிரமும்,

தென்மலை இருந்த இருந்தவன் இயற்றமிழ்
கெழீஇய அகப்பொருள் தழீஇ நோக்கி...
பாற்கடற் புல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பி

என்று நம்பியகப் பொருள் பாயிரமும்,



தொல்காப்பியன் அருள் ஒல்காப் பெரும்பொருள்
அகப்பொருள் இலக்கணம் அகப்படத் தழீஇ''

எனப் பிறிதொரு நம்பியகப் பொருள் பாயிரமும்,

''பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்
ஓங்கிய சிறப்பின் உலகமுழு தாண்ட
வாங்குவில் தடக்கை வானவர் மருமான்
ஐய னரிதன் அகலிடத் தவர்க்கு''

எனப் புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரமும் வருகின்றன.

இவற்றுள் ஒன்றேனும்—நூலாசிரியனுக்கு முதல் நூற்களாக இரண்டு நூற்களைச் சுட்டவில்லை. வடமொழி யாக்கம் எழுதிய நன்னூலார் கூடக் காட்டவில்லை. வடமொழிக் கலப்பால் யாப்பு நெகிழ்ச்சிகளைத் தொகுத்துரைத்த அமுதசாகரர் போன்றார்க்கும் பிற வடமொழி நூல்கள் முதனூல்களாகக் காட்டப்படவில்லை. தலையாய இலக்கண நூலான தொல்காப்பியப் பாயிர மரபைப் பின்பற்றாது விட்டிருக்க வாய்ப்பில்லை.

மேற்காட்டிய காரணங்களை நடுவு நிலையோடு எண்ணிப் பார்த்தால், ஐந்திரம் என்பது ஐந்திர வியாகரண நூலைக் குறிக்கவில்லை என்பது விளக்கமாகும்.

இனி ஐந்திரம் எனும் தொடர் எதைக் குறிக்க எழுந்தது என்பது ஆராயப்பட வேண்டும்.

ஐந்திணை என்ற தொடரை ஐந்து திணை எனப் பிரித்தல் போல், ஐந்திரம் என்பதையும் ஐந்து திரம் எனப் பிரித்தல் வேண்டும்.

ஐந்து—எண்ணுப் பெயர்

திரம்—உறுதிப்பாடு[1] (குணம்)

திரம் ▷ திறம் > உறுதி[2]

ஒப்பு நோக்கு :—ஒளிர் ▷ ஒளிறு; கருப்பு ▷ கறுப்பு

'நீ திரத்து வாய்மை தவறி'[3]

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற தொடரின் பொருள், ஐந்துறுதிப் பாடுகள், ஐந்து பண்புகள் நிறையப் பெற்ற தொல்காப்பியன் என்பதாதல் வேண்டும்.[4]

நிறைவு—என்பது பண்பு நிறைவைச் சுட்டி வருதலைப் பல இடங்களிற் பார்க்கிறோம்.

மாண்ட
பெண்மை நிறைத்த பொலிவு—புறம், 337
நன்மை நிறைந்த நயவரு பாண'—புறம். 308

என்பன காண்க. ஆதலின் ஐந்து பண்புகள் நிறையப் பெற்ற தொல்காப்பியன் எனப் பொருள் கோடலே பொருத்தமாகிறது.

இலக்கண ஆசிரியர்கள் சிறந்த பண்புடையராய் இருத்தல் வேண்டும் எனப் பாயிரம் உரைப்போர் விரும்பி

1. பார்க்க. றமிழ் மொழி அகராதி நமச்சிவாய முதலியார் பதிப்பு (1929) ப. 772.

2 பாவாணர் ஒப்பியன் மொழி நூல்-ப-141.

3. வில்லி பாரதம் உலூகன் தூதுச் சுருக்கம் தமிழ்விடு தூது.

4. மாதிரத்தன்—என்று குறுந்தொகை 133ஆம் பாடலின் ஆசிரியர் பெயர் ஈண்டு நினைக்கத்தக்கது.



இருக்கின்றனர் என்பது கீழ் வருவனவற்றால் விளக்க மாகும்.

'பண்புற மொழிந்தனன் பான்மையிற் றெரிந்தே' என வரும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரமும்,

'வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்' எனத் தொடங்கி நல்லாசிரியர் இலக்கணம் கூறும் ஆத்திரையன் பேராசிரியப் பாயிரமும்.

'உலகியல் அறிவொடு உயர் குணம் இனையவும்
அமையவன் நூலுரை ஆசிரியன்னே'

எனவரும் நன்னூற் பாயிரமும், குணசாகரர் (குணக்கடற் பெயரோன்'—யாப்பருங்கலப் பாயிரம்) என்ற ஆசிரியப் பெயரும், இலக்கண ஆசிரியனுக்கும், பண்பு நிறைவிற்கும் உள்ள தொடர்பை வற்புறுத்தும்.

ஐந்து பண்புகள் யாவை? ஐந்திரம்—என்னும் தொடர் ஐந்துறுதிப் பாடுகளை அல்லது ஐந்து பண்புகளைக் குறிக்க வந்தது எனக் கூறின் அவ்வைந்தும் யாவை என்பது இனி ஆராயப்படல் வேண்டும். தொல்காப்பியர் ஒரு சமணத் துறவி என்பது ஒத்துக் கொள்ளப்படின், சமண சமயத் துறவிகளுக்கு ஐந்து உறுதிப்பாடுகள் கூறப்படுவதை நோக்க வேண்டும்.

(1) ஊறின்மை (2) வாய்மை (3) களவுசெய்யாமை (4) மணவாமை (பிரமசரியம்) (5) தவம் என்பன சமண சமய விதிப்படி துறவிகட்கு வரையறுக்கப்பட்ட உறுதிப் பாடுகள்.[11] இவற்றையே "ஐந்திரம்" என்ற தொடர் சுட்டியிருக்க வேண்டும். அல்லது (1) அன்புடைமை (2) பழி நாணுடைமை (3) ஒப்புரவுடைமை, (4) கண்ணோட்டம்

(5) மெய்யுரை என்ற ஐந்து பண்புகளையும் கொள்ளலும் குற்றமாகாது. ஏனெனில் இலக்கிய, இலக்கண, வளமிக்க தமிழுக்கு ஒரு புத்திலக்கணம் செய்தவன், பொருள் பாகு பாட்டை வகைப்படுத்தியவன், யாப்பி னமைதிகளைத் தொகுத்துரைத்தவன் தொல்காப்பியன் எனும் சான்றோன் ஆதலின் சான்றோர்க்குரிய அன்பு நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து பண்புகளும் நிறைந் திருந்தான் என்று கூறுவதும் பொருந்துவதே.

சால்பு—என்றால் பண்பு நிறைவு. சான்றாண்மை என்பதற்குப் 'பல குணங்களாலும் நிறைந்த அவற்றை ஆளும் தன்மை, எனப் பரிமேலழகர் உரை செய்தமையும் ஈண்டுக் கருதத் தக்கது. தமிழ்ச் சான்றோராகிய தொல் காப்பியர் பண்புகள் ஐந்தும் உடையராய் இருந்தார் என்பதே 'ஐந்திரம்' என்ற தொடரின் கருத்தாதல் வேண்டும்.*

* இக் கட்டுரை (பக்கம் 73—84) 1966இல் எழுதப்பட்டது. இதில் கூறப்பட்டவற்றுள் சில இப்போது எனக்கு உடன்பாடில்லை. ஆய்வாளர் சிந்தனைக்காக இங்கே மீண்டும் வெளியிட்டுள்ளேன்.

## திருமதி & திரு. அறவாணன்

### எழுதிய/பதித்த நூல்கள்

1 சைனரின் தமிழிலக்கண நன்கொடை
2 அவிநயம் மூலமும் உரையும்
3 அமுதசாகரம் மூலமும் உரையும்
4 இந்திரகாளியம் மூலமும் உரையும்
5 தொல்காப்பியக் களஞ்சியம்
(தமிழக அரசின் பரிசு நிதி வெளியீடு)
6 நாட்டுப்புற இலக்கியப் பார்வைகள்
7 அவள் அவன் அது (கதைகள்)
8 ஆராய்ச்சித் தமிழ்—ஒரு முன்னுரை
9 ஆய்வுக் கொத்து
10 கட்டுரை எழுதுதல் எப்படி?
11 புரட்சிப் பொறிகள்
12 காலப் போக்கும் கல்லூரிப் போக்கும்
13 ஒளிபரவட்டும்
14 ஐந்திரம்
15 பெண்மொழி
16 புதிய கோலங்கள்
17 தொல்காப்பிய ஒப்பியல்
18 Research Papers on Tamilology
19 Studies in Comparative Literature

ஸ்ரீமதி பிரிண்டர்ஸ், சென்னை-600 002